
# திங்கள் முதல் யாழ். செயலக அலுவலகத்தில் பாஸ்போட் பெற விண்ணப்பிக்கலாம்

இம்மாதம் 16-ம் திகதி முதல் யாழ் மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகும் பாஸ்போட் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் ஏற்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கான பாஸ்போட் பெறுவதற்கு 300 ரூபாவும் சரவதேச பாஸ்போட் பெறுவதற்கு மேலதிக 1000 ரூபாவும் அறவிடப்படும் இப்பணம் இலங்கைவங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் செலுத்தப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் இப் பணத்திற்கான முத்திரை ஒட்டக்கூடாதென்றும் வங்கியில் பணம் கட்டமுன்னர் பாஸ்போட் அலுவலகத்தில் ஒரு பற்றுச்சீட்டை பெற்ற பின்னர் வங்கியில் பணம் கட்டும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)


பக்கங்கள் பன்னிரண்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

[illegible] 04 [illegible] 69 சனி 14-04-1990 (சித்திரை 01) ரமழான் 17

# பொலிஸ் நிலையங்கள் மீள திறக்க

# பிரபா - ஹமீத் சந்திப்பில் இணக்கம்

## வடகிழக்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை பற்றி இச்சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இரு இடங்களிலும் இரு தினங்களுக்கு முன்னர் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

நேற்றுக் காலை பத்து மணியளவில் நல்லூரில் விடுதலைப் புலியினருக்கும் அரச தரப்பினருக்குமிடையே நடைபெற்றபேச்சின்போது இதற்கு இணக்கம் காணப்பட்டது

இப் பேச்சுக்களில் அரச தரப்பில் நீதியமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் கலந்து கொண்டார். விடுதலைப் புலிகளின் தரப்பில் தலைவர் திரு. வே. பிரபாகரன், பிரதித் தலைவர் திரு. மாத்தயா, முன்னணியின் செயலாளர் நாயகம் யோகி, யாழ் மாவட்ட தளபதி பானு, யாழ்மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் டொமினிக், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் திருமதி பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப் பேச்சுக்களின்போது வடக்கு கிழக்கு சட்டம் ஒழுங்கு, பிரச்சினைகள் குறித்தும், கிழக்கு மாகாண முஸ்லீம்களின பிரச்சினைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன

அத்துடன் தமிழீழத்தில் நடக்கும் புனருத்தாரண, புனர்நிர்மான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றியும,

—12-ம் பக்கம் பார்க்க

வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் முரசொலியின் புத்தாண்டு வாழ்த்துக்கள்



தலைவர் பிரபாகரன் தலைமையில் புலிகள்-அமைச்சர் ஹமீத்-சந்திப்பு

## புலிகளின் பாதுகாப்புடன் அமைச்சர் ஹமீத் யாழ்வந்தார்

நேற்று யாழ் நகர் வந்த அமைச்சர் ஹமித்தை விடுதலை புலிகள் பலாலி விமானநிலையத்திலிருந்துதமது பாதுகாப்புடன் அழைத்துவந்தனர்.

இரு மோட்டார் சைக்களில் சீருடை இளைஞர்கள் முன்வர புலிகளின்பச்சைநிற வாகனங்களில் வீரர்கள் ஆயுதமேந்திய படி பின் தொடர அமைச்சர் ஹமித் பயணித்த கார் பவனியாக பலாலி வீதிவழியாக யாழ் நகர் வந்தடைந்தது.

முரசொலிக்கு

## மககள்முனனணி பிரதித்தலைவர் வழங்கிய புதுவருடச் செய்தி

கடந்த காலங்களில் மக்கள் அனுபவித்து வந்த இன்னல்கள் நீங்கி மகிழ்ச்சிகரமான குதூகலமான புதுவருடத்தை கொண்டாடஏற்றசூழ்நிலையை தம் உயிர்த் தியாகம் மூலம் ஏற்படுத்திய போராளிகளையும் பொதுமக்களையும் இந்நேரத்தில் நினைத்துப்பார்க்கின்றோம் இவ்வாறு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் எஸ். கரிகாலன் "முரசொலி"மூலம் மக்களுக்கு வழங்கிய புதுவருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

எதிர் காலத்தில் தமிழ்பேசும் மக்கள் ஓரணியில் திரண்டு நாம் சுயநிர்ணய உரிமையுடன வாழ உழைக்கும் அதேவேளை விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி தமிழ்மக்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்து

— 12 ஆம் பக்கம் பார்க்க

## மட்டுநகரில் செவனவுக்கு தடை

மட்டுநகரில் செவன அபிவிருத்தி லொத்தர் ரிக்கற் விற்பனை நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளினல் நேற்று இவ்விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன. (05)

உள்ளே

"புதுவருட ஸ்பெஷல் கொடி பறக்குது எங்களுக்கு இப்பதான் வழிபிறக்குது"

நேரடி ரிப்போட்

5-ம் பக்கம் பார்க்க




விநாயகர் திருவருள் முன்னிற்க
எண்ணிய எண்ணி யாங்கெய்தி
எல்லோரும் இன்புற்றிருக்க
வேண்டுகிறோம்.

புத்தாண்டுத் தினததன்று மருதடி
விநாயகர் ஆலய மருங்கில்
மில்க்வைற பாவனையாளர்களுக்குச்
சகாய விலையில் விற்பனை செய்யவும்
மேலுறைகளுக்குப் பரிசுகள் வழங்கவும்
மில்க்வைற்வர்கனம் காத்திருக்கும்

**மில்க்வைற்**

யாழ்ப்பாணம்

04135



## சிறு விளம்பரம்

### தேவை

மின் தறி நெசவில் குறைந்தது 2 வருட அநுபவம் உள்ள பெண் நெசவாளர் உடன் தேவை. நேரில் வரவும். யூனியன் பவர் லூம், 190ஆம் கட்டையடி, நுணுவில், சாவகச்சேரி (04110)

### தேவை

தனிப்பட்ட ரியூசன் கொடுப்பதற்காக. பாலர் வகுப்பிலிருந்து A/L வரை தங்களால் இயன்றபாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். காலை6—8. 2—3 ற்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி 04112

### கல்வி

G.C E (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இது வரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினுல் தொடர் வகுப்புக்கள் மூலம் 1 மாதத்திற்குள் சகல போசன்களும்விசேட சித்திக்கு நிறைவேற்றப்படும் A/Lவரைசகலபாடங்களும் இலககணத்துடன் பேச்சு ஆங்கிலமும் கற்பிக்கப்படும் காலை 6—8 மாலை 2—3 ற்குள் நேரடியாகச்சந்திக்கவும்.
ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி 04120

### விற்பனைக்கு

28ஸ்ரீ6243 இலக்கம் கொண்டட்ரக் ELF 350 விற்பனைக்குண்டு தொடர்பு ராணி மில் நெல்லியடி அல்லது அ குமாரசுவாமி 88 பலாலி வீதி இலுப்பையடிச்சந்தி யாழ்ப்பாணம் 04143



அனைவருக்கும் நல்ல வாழ்வும் செல்வமும் பெருக
இச் சித்திரைப் புத்தாண்டில் வேண்டி நிற்கின்றோம்.

அழகிய ★ வெளிப்புற ★ உட்புற

**கலர்படப் பிடிப்புகளுக்கும்**

உங்கள் கலர்ப் பிலிம் சுருள்களை
நவீன கம்யூட்டர் மூலம் பிரதி
பண்ணிக் கொள்ளவும்

**ஜெகன் போட்டோ**

399 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

04130



அன்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும்
எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ கொண்டா
★ யமஹா
★ சுஸூக்கி

மோட்டார் சைக்கிள்களின்சகலஉதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள,

!!

**காந்தா மோட்டோர்ஸ்**

54 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

04124



புத்தாண்டே வருக] இத்தரணியில் எம்மக்களுக்கு
நித்திய நிறைவாழ்வு தருக

சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கும் கறுப்பு
வெள்ளை மற்றும் கலா உட்புற வெளிப்
புறப் படப்பிடிப்பிற்கும் உங்கள
படங்களை நவீனமுறையில் பிறேம்
போடவும் பாடல்களை ஒலிப்
பதிவு செய்யவும் புதிய
பழைய திரைப்படங்
களின் ஒறிஜினல்
வீடியோ பிரதி
களை வாடகைக்குப் பெறவும்

**வீடியோ ஆனந்த் ஸ்ருடியோ**

யாழ் வீதி மானிப்பாய்

(இம்மாதம் 31ஆம் திகதிவரை புகைப்படம்
பிடிப்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்)

04126



எமது வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

# சுந்தர்ஸன்

இறக்குமதி செய்யப்பட்ட நவீன மின்சார உபகரங்ணகள் நவீன அலங்கார தூங்கு லாம்புகள் சுவர் லாம்புகள்
சுவர்க் கடிகாரங்கள் மின்சார விசிறிகள் மேசை விசிறிகள்
மற்றும்
மகாராஜாவின் எஸ்.லோன் பைப்புக்கள் உபகரணங்கள் சொலிட் டயாஸ் சிக்ம NEI நீர் இறைக்கும் இயந்திரங்கள்
CBE பல்புகள் ஆகியவற்றை மிகவும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்:
எம்மால்
தயாரிக்கப்படும் 4 அடி 2அடி ரியூப்லைற் செற்றுகள் வட்ட ரியூப்லைற்செற்றுகள்
TENBY சுவிச் பிளக் ஆகியவற்றிற்கு வடமாகாண ஏவிகநியோகஸ்தர்களில் ஒருவராக விளங்குபவர்கள்

# "சுந்தர்ஸன்"

மத்திய சந்தை மானிப்பாய்

முக்கிய குறிப்பு வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

04075

## பிரமோதூத வருடம் நம்பிக்கையின் தூது

காலத்தின் ஓட்டத்தில் மீண்டும் ஓர் புதிய ஆண்டு இன்று மலர்ந்துள்ளது.

அறுபது தமிழ் வருடங்களின் சுற்று வட்டமாக நான்காவது ஆண்டாக பிரமோதூத வருடம் மீண்டும் மலர்ந்துள்ளது

இன்பமும், துன்பமும் கலந்த இவ்வுலகின் வருடப்பிறப்பு என்பது ஓர் வருடாந்த நிகழ்ச்சியானாலும் பழையன கழிந்து புதியன புகுவதை உணர்த்துவதாக இது அமைகிறது.

நீண்ட பாலைவனத்தின் பின்னர் வரும் ஒரு பசுமையான புற்தரையாகப் பிரோமதூத ஆண்டு விளங்குமா? அமைய வேண்டும் என்பதே எல்லோர் விருப்பும். பாலைவனத்திற் தெரியும் கானல் நீராக எதிர்பார்ப்புகள் யாவும் வெறும் மாயையாக மாறக்கூடாதே என்பதே எல்லோரினதும் பிரார்த்தனையுமாகும்.

நாம் நடந்துவந்த பாதையை ஒருமுறை திரும்பிப் பார்க்கின்றோம். எம்மோடு இருந்த பலரைக் காணவில்லை இரண்டு அத்தியாயங்களாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் இந்த வழிச் சுவடுகளை

## இதயநாதம்

**சனிக்கிழமை** 14-04-1990

நல்வாக்கு

ஒரு காரியத்தில் அளவுகடந்த முயற்சி எடுத்துக் கொண்டாலும் அது முடிகிற காலத்திலேயே முடியும்.
-ஔவையார்

**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

இன்றும் நினைக்கும்போதும் அவை பெரும் பாரமாகவே எமக்கிருக்கிறது.

கடந்த சில வருடங்களாக மனித உயிர் என்பது பெறுமதி அற்றதாகக் கருதப்பட்டது. எனினும் எம் மக்களும் ஏதோ ஓர் நம்பிக்கையில் தம் வாழ்க்கையை நகர்த்தி வந்தனர்.

இன்று அந்த நம்பிக்கையும் அடிவானில் பிரகாசமாகத் தெரியத் தொடங்கி விட்டது. மனிதனுக்கு இருக்கின்ற நம்பிக்கை தான் அவனிடையே சமயச் சடங்குகளை வேரூன்றச் செய்து விடுகிறது.

கடந்த காலங்களில் கூட இத்தனை அழிவுகளுக்குள்ளும் சமயச் சடங்குகளும், சம்பிரதாயங்களும் அழிந்து விடாமல் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது.

தைப்பொங்கல், தீபாவளி என நீண்டு சொண்டு போகும் பட்டியலில் சித்திரை வருடப்பிறப்புக்கும் ஒரு தனித்துவம் இருக்கிறது. பெரியோரை மதித்து அவரிடம் ஆசியைப் பெறுதல், சிறுவருக்குக் குதூகலம் அளிக்கும் புத்தாடை, நண்பர்களுடன் பழகச் சந்தர்ப்பம் என மனதை விரிவடையச் செய்யும் தினமாக வருடப்பிறப்பு விளங்குகிறது.

பிரமோதூத ஆண்டு எல்லோர் மனங்களிலும் அமைதியும், மகிழ்ச்சியும் திகழச் செய்ய வேண்டும் என்பதே ஒவ்வொருவரினதும் அவாவாகும். பிரமோதூத ஆண்டு அழிவுகள் இல்லாத ஆண்டாக தமிழர் தம் மகிழ்ச்சியின் தொடக்க ஆண்டாக மிளிரவேண்டும்.

அனைவரது வாழ்விலும் இன்பமும், குதூகலமும், மகிழ்ச்சியும் பொங்கிப் பிரவாகிக்கப் பிரமோதூத ஆண்டு நம்பிக்கையின் தூதனாக வர, புதிய ஆண்டை நாம் வரவேற்போம்.

# புத்தாண்டு உலக நாடுகளில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது

தமிழர்களின் சித்திரைப் புத்தாண்டு இன்று பிறக்கிறது. பிறக்கின்ற புத்தாண்டு 'பிரமோதூத' புத்தாண்டாகும். பிறக்கின்ற புத்தாண்டு புது வாழ்வையும் அமைதியையும் தரவேண்டும் என்பது மக்கள் பலரது அவாவாகும்.

புத்தாண்டில் புதிய எதிர்பார்ப்புகளுடன் காலடி எடுத்து வைப்பர். ஒவ்வொரு ஆண்டு பிறக்கின்ற போதும் புதிய எதிர்பார்ப்புகள் ஏற்படுகின்றன.

முடிந்துபோன ஆண்டில் ஏற்பட்ட கஷ்டங்களை துன்ப துயரங்களை எண்ணிப்பார்க்கும்போது இதயம் வேதனையால் வெதும்புகின்றது. விடைபெறுகின்ற ஆண்டில் ஏற்பட்ட துன்ப துயரங்கள் இன்றோடு முடியட்டும். மலரும் புத்தாண்டு சூழ்ந்திருக்கும் காரிருளினை அகற்றி சுதந்திர புதுவாழ்வு தரவேண்டும்.

புதுவருடத்தை பல்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாகக் கொண்டாடுகின்றார்கள் ஒவ்வொரு நாட்டவரும் புத்தாண்டை வரவேற்கும் முறை வினோதமானது.

### அமெரிக்கா

அமெரிக்காவில் பிலடெல்பியா என்ற இடத்தில் வாழும் மக்கள் புத்தாண்டு தினத்தைக் கொண்டாடும் முறை வேடிக்கையானது ஆயிரக்கணக்கானவர்கள் விந்தையான கோமாளி உடைகளை உடுத்திக் கொண்டும் புதுவருட நாளில் நாட்டியமாடிக் கொண்டும் வினோத விந்தைகளையும் குரங்குச் சேட்டைகளையும் செய்து கொண்டும் தெருக்களில் ஊர்வலமாக வருவார்கள் இக்காட்சியை மக்கள் திரளாக நின்று வேடிக்கை பார்க்கின்றார்கள்.

### ஜப்பான்

ஜப்பானியர்கள் ஒவ்வொரு புத்தாண்டுத் தினத்தன்றும 'கார்ப்' என்ற மீனைச் சமைத்துச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். 'கார்ப்' மீன் தண்ணீரில் இருந்து எழுந்து வெகு உயரத்திற்குக் குதிக்கும் தன்மையுடையது. அதுமட்டுமல்ல மிக வேகமான சூழல் நீரிலும் நீந்தக் கூடியது இந்த மீனைப் போன்ற சக்தியையும் சுறுசுறுப்பையும் தாங்கள் அந்த ஆண்டின் அனைத்து நாளிலும் பெற முடியும் என்று நம்புகிறார்கள்.

### இங்கிலாந்து

இங்கிலாந்தில் கிராம மக்கள் புத்தாண்டு தினத்தன்று நடு இரவில் பொது இடங்களில் மிகப் பெரிய தீயை வளர்க்கின்றார்கள் அந்தத் தீயைச் சுற்றி ஊர்மக்கள் அனைவரும் நடனமாடி மகிழ்கிறார்கள். வளர்த்த தீ அணையும்வரை ஆணும் பெண்ணும் கட்டி அணைத்து ஆடிக்கொண்டே இருக்கிறார்கள்.

### லாவோஸ

லாவோஸ் மக்கள் பறவையையும் தண்ணீர்ப் பைகளில் மீனையும் வாங்கி பறவைகளை வானத்தில் சுதந்திரமாகச் சிறகடித்துப் பறக்க விட்டும் மீன்களை ஆற்றில் நீந்திச் செல்ல அனுமதித்தும் விட்டு விடுகின்றார்கள் புத்தாண்டின் புதுநாளில செய்த ஒரு நற்காரியம் என்று அதை நினைக்கின்றார்கள்.

**வி.என்.எஸ். உதயசந்திரன்**

### போர்த்துக்கல்

போர்த்துக்கலில் புத்தாண்டு மலருபபோது மணிக்கூடு பன்னிரண்டு தடவைகள் 'டாங் 'டாங்' என்று அடிக்கும் போது பன்னிரண்டு திராட்சை முந்திரிகை உண்பார்கள். ஒன்றாவது கீழே விழுந்துவிட்டால் அல்லது தொண்டைக்குள் சிக்கித்து விட்டால் அந்த ஆண்டு அதிஷ்டமற்ற ஆண்டு என நம்புகிறார்கள்.

### ரோம்

ரோமானியர்களின் 'ஜெனஸ்' கடவுளின் பெயரிலிருந்து தான் ஜனவரி என்ற பெயர் ஏற்பட்டது. அந்தக் கடவுள் புத்தாண்டு அன்று நடு இரவில் ஒவ்வருடைய வீட்டுவாசலிலும் காத்திருந்து சென்ற காலத்தையும் வருங்காலத்தையும் நோட்டம் விட்டுக் கொண்டிருப்பார் என்று நம்புகின்றார்கள்.

### சீனா

சீனர்களின் புத்தாண்டு கலண்டர், நிலாவின் சஞ்சாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. அவர்களின் புத்தாண்டு ஜனவரிக்கும் பெப்ரவரிக்கும் இடைப்பட்ட ஒரு நாளில் தொடங்குகின்றது அந்த விழா மிகப் பெரிய இராட்சதப் பாம்பு உருவத்தை ஆட்கள் மறைவாக தூக்கிச் சுமந்தவாறு வீதி வழியே ஆடிக்கொண்டு செல்வதில் தொடங்குகின்றது. அந்த 'ட்றுகன்' (Dragon) வரும்போது குடும்பத்தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டு முன் வாசலைத் திறந்து வைக்கிறார்கள். இப்படிச் செய்தால் அதிர்ஷ்டமான ஆண்டாக அமையும் என்று நம்புகின்றார்கள்.

### இத்தாலி

இத்தாலியர்களின் புத்தாண்டு இரவு ஓசை மிக்கதாக இருக்கும். அன்று வீட்டில் உள்ள பழைய சாமன்கள் மேசை கதிரைகள் படுக்கை தலையணைகள், வேகமாக ஜன்னல் வாசல் வழியே 'டமால்' டுமீல் என்று விட்டெறிலார்கள் பழைய ஆண்டுத் தொல்லைகளையெல்லாம் விட்டெறிவதாக அர்த்தமாம்.

### வட அம்பர்லாந்து

வட அம்பர்லாந்தில் கிராமத்து இளைஞர்கள் தார் நிறைந்த பீப்பாக்களை எரிய விட்டு அதனைச் சுற்றி ஆடுகிறார்கள், இது ஆரிய வணக்கத்தைக் குறிக்குமாம்.

### தெற்கு மாரீஸ

தெற்கு மாரீஸ்சிலும் புத்தாண்டு அன்று நடனங்களை ஆடுகிறார்கள் அப்போது ஒருவர் கத்தியைக் கொண்டு இன்னொருவருடைய தலையை வெட்டப் போவது போல அடிக்கடி கொண்டு போவதும் பிறகு வேகமாக பின்வாங்குவதுமாக 'பூச்சாண்டி' காட்டுவார்கள் இது இந்த வருடத்தை வரவேற்பதாகும.

### ஸபெயின்

ஸ்பெயின் புத்தாண்டின் போது நன்றாக உண்டுகளித்து மகிழ்ந்தால் ஆண்டு பூராவும் நல்ல கொண்டாட்டமாக இருக்கும் என்று நம்புகிறார்கள்.

### ஸ்கொட்லாந்து

ஸ்கொட்லாந்தில் புத்தாண்டுதான் பெரிய கொண்டாட்ட தினம் ஏழை - பணக்காரர் - இளைஞர்கள் - முதியவர்கள் - ஆண்கள் - பெண்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரும் தங்கள் துயரங்களையும் துன்பங்களையும் மறந்து ஆடிப்பாடிக் களிப்பார்கள்.

எந்த நாட்டு மக்களாக இருந்தாலும் எந்த இன மக்களாக இருந்தாலும் புத்தாண்டு என்றால் குதூகலத்திற்கும் கொண்டாட்டத்திற்கும் பஞ்சமில்லை.

புத்தாண்டில் புது மாற்றத்தை எல்லா நாட்டினரும் எதிர்பார்ப்பார்கள் தமிழர் வாழ்விலும் புது மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்பார்ப்பதில் தவறில்லை அல்லவா!

## புத்தாண்டே புதுவாழ்வு தா!

தென்றலுடன் தென்னைகளோ தலையுரசும்!
தேனமுதக் காட்சியதிற் கலையுரசும்!
நின்ற பனை கமுகெல்லாம் நெட்டுயிர்க்கும்!
நித்திரையைப் பூமியினி விட்டுயிர்க்கும்
குன்றுமலை வானெல்லாங் குளிர வரும்;
கும்மாளம் இயற்கையிலே மலர வரும்!
தின்று வருந் துயரெல்லாந் திசைகள் எங்கும்!
திரட்டும்! வாழ்த்துக்கள்; இன்பம் பொங்கும்

*

நேற்றைய கைகள் விலங்கோடு! — அட!
நெஞ்சம் அடிமைப் புண்ணோடு!
வீற்றது எல்லாம் விளையாட்டு! — அதை
வீழ்த்திடு வோமென நிலைநாட்டு!
காற்றைக் கிழித்து மேலேறும்; — உயர்
கடமை நமது தோளேறும்!
ஈற்றில் விடுதலை ஈழம் தான்! — நம்
இதயம் கவிதைக் கோலம்தான்!

*

உள்ளார்ந்த நம்பிக்கை, உயர்வில் நாட்டம்;
உள்ளபொருள் யாவிலுமே ஓர் பொதுமை
நோட்டம்;
கள்ளமிலா நெஞ்சிற் கனலுங் கவியாட்சி;
காணட்டும் விடுதலையின் கனிவான மீட்சி!
தெள்ளத் தெளிவாகத் தேர்ந்த மதி ஞானம்;
தெள்ளுதமிழ் எனுமோர் தெம்பு தரும் பானம்;
பள்ளமிலா வாழ்விற்கிவை பண்பட்ட பாதை!
படிப்படியாய்க் கொள்வீரே பயன்மிக்க போதை!

*

செம்பரிதி வானத்திற் கோலமிடும்!
சிந்தையிலே அழகெல்லாந் தாளமிடும்!
கம்பனவன் கவிதையிலே காணவரும்;
காலையிது சுவையெல்லாம் பேணவரும்!
நம்பவருங் காட்சியிது நாடகமே!
நடக்கின்ற இயற்கையதன் ஊடகமே!
பம்பரமாய்ப் பூமியிது சுற்றி வரும்!
பார்த்திருப்பீர் புத்தாண்டு வெற்றி தரும்!

—பாரதிசீலன்

## அறுவடை மும்முரம் ஆனல் விலை வீழ்ச்சி

வடமராட்சிப் பகுதியில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளபோதிலும் அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வருடம் இப்பகுதியில் புகையிலைச் செய்கை குறைவாக நடைபெற்றபோதிலும், அதன் விலை உயரவில்லை தற்போது இப்பகுதியில் ஒரு புகையிலை மரம் 20 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை விவசாயிகளிடம் தேங்கிக் கிடப்பதனாலேயே இம்முறை புகையிலையின் விலை உயரவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர். (50)

# நான் என்றில்லாமல் நாம் எனும் ஒன்றித்த உணர்வு கொள்வோம்

இன்று
புதிதாய் ஒரு பூமி
பிளந்து வந்தது......
வரட்சிக் கொதிப்பால்
விரிசல் கண்ட
இதயங்களில் எல்லாம்
இன்று ஓர்
வசந்த ஜனிப்பு
இருட்டறையில்
அடைபட்டுப்போனவர்களுக்கு
நம்பிக்கையின்
பிரவேசங்கள்
பிராண வாயுக்கள்!

கடந்த வருடம்...... கடந்த காலம்...... உதிர்ந்து போன காலச் சருகுகள் கால்களை நெருடுகின்றன. குனிந்து பார்ப்போம்...... கனவில் நேற்று நடந்த சம்பவமாய்... கடந்த வருடம் தெளிவின்றி வந்து போனது...... நினைத்துப் பார்ப்போம்...

சுகங்களை இழந்து விட்டு கிடந்து ஏங்கும நோயாளி போல...... கற்பனைகளைத் தொலைத்துவிட்டு ஏங்கும் கவிஞனைப்போல...... உருண்டோடிப் போய் பள்ளத்திற்குள் விழ்ந்துவிட்ட போளைக் குண்டுகளை எடுக்க முடியாது கிடந்து தவிக்கும் சின்ன வயதுக் குழந்தையின் மனநிலையில் நாங்கள் இன்று இருப்பதாகத் தெரிகின்றது. நாங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றை இழந்துவிட்டு...... இழப்புகளை சந்தித்து விட்டு இன்று, எல்லாவற்றையும், எல்லா இழப்புக்களையும் தூக்கி எறிந்து விட்டு...... யாவற்றையும துடைத்துத் துப்பரவாக்கி விட்டோம் என்ற நிலையில் நாங்கள் 'வழமைக்' குத் திரும்பி விட்டோம். இது யதார்த்தத்தின் பிரதிபலிப்புத்தான்; வரவேற்கப்பட வேண்டியது தான். மூலையில் போய் முடங்கிக் கிடக்காமல், பாம்பு செட்டையை கழட்டி எறிவது போல் உறுத்தல்களைக் களைந்து விட்டு இப்படி நடைமுறைக்குத் திரும்பியது ஆரோக்கியத்தின் அறிகுறிதான்

சரி; இந்த நிமிடம் தொட்டு, இதுவரை கடந்த காலத்தில் நடந்தது யாவும் முடிந்து விட்டது இன்று புதிய நாள்...... இனி என்ன? வரும் நிமிடம் என்ன? நாளை என்ன? இந்தக் கேள்விகள் தான் மனதல் தொத்தி நிற்கின்றன

சித்திரைப் புதுவருடம்! தமிழர்களின் ஒரு சந்தோஷநாள்; அன்றுவது சந்தோஷமாக இருக்க வேண்டும் என எல்லாத் தமிழ் மனங்களும் நினைக்கும் நாள். ஆனால் சநதோஷமாக இருக்க எல்லோராலுமா முடியும்? எல்லோராலும் புத்தாடை அணிந்து, சந்தோஷமாக குடும்பததுடன் கோவிலுக்குப் போய் வர முடியுமா? பாயசமும், பலகாரமுமாய் எல்லோராலுமா சாப்பிட முடியும்? நண்பர்கள் உறவினர்கள் வீட்டிற்கு போய்வரமுடியுமா? ஆனால்... இப்படி எல்லாம் புதுவருட நாளைக் கழிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் எல்லோர் ஆசையும் எல்லோர் மனங்களிலும் இத்தகைய எதிர்பார்ப்புகள் தான் அதிகம்.

வேதனைப் பட்டமனங்களில் கூட இந்த நினைப்புத்தான். எரிந்து போன உள்ளங்களிலும் இப்படித்தான் சில சில்லிப்பு. போகட்டும்... வெறுமனே இவைஇருந்து விட்டுப் போகட்டும்...

கடந்த சில வருடங்களாக எம்மால் நிம்மதியாக, சந்தோஷமாகஎமது புது வருடத்தை, அல்லது எந்த வொரு தமிழர் கொண்டாட்டங்களைக் கொண்டாட முடிந்ததா எம் சிலருக்கு முடிந்துபோனாலும் மில் பலருக்கு?

உயிர்கள், உடைமைகள்..... வீடுகள்சொத்துக்கள்...இப்படி ...இப்படி எத்தனை இழப்புக்கள் நமக்கு! கல்வியில்...கலை கலாசாரத்தில் மத வழிபாடுகளில் பாரம்பரிய பண்பாட்டு நிகழ்ச்சிகளில் எமது நாளாந்த நடைமுறை வாழ்வில் இப்படி ஒட்டுமொத்தமாய் எல்லாவற்றிலும் எத்தனை பாதிப்புகள்... எதைத்தான் எம்மால் ஒழுங்காக கடைப்பிடித்து வாழ முடிந்தது?

பயமும். பீதியுமாய்நெஞ்சு படபடக்க இராத தூக்கத்தில் திடுக்கிட்டு எழவைக்கும் நிகழ்வுகள் தான் எத்தனை!

இராட்சச உருளைக்கு அடியில் எம்மைப் போடடு நசித்தபின்னரும நாம் இன்னமும் உயிருடன் இருப்பதுதான் அதிசயம்! கார் இருள் சூழ்ந்த பாதாளத்தில் எம்மைத தூக்கிப்போட்ட பின்னரும் ஒளிக் கீற்றாக 'நம்பிக்கை' உள்ளே வரும் அந்த கடைசித் துடிப்பை பிடித்தபடி வெளியேறும் திடம் எமக்கிருந்தது. அது தான் இன்று நாம் உயிருடன் இருக்கின்றோம்! சரி இன்று புதுவருடம்!

மனதில் சந்தோஷம் குதூகலமுமாய்நாங்கள்சிறகடித்துப் பறக்கிறோம். பறவாயில்லை. ஆனால் கூடவே சிற கொடிந்து போனவர்களையும் நினைத்துப் பார்ப்போம்! இதோ நாங்கள் இந்தவேளை இன்பமாக இருக்கின்றோம்... ஆனால்... அதோ பாருங்கள் சிலரின் இதயங்கள் துயரங்களாலும், வேதனைகளாலும் இரும்பாய்க் கனக்கின்றன!

இன்று எங்கள் குழந்தைகளின்கண்களில் எல்லாம் மழழ்ச்சியின் மத்தாப்பு வெடிகள்... அங்கேபாருங்கள் எத்தனை அனாதை மழலைகள்...... திக்கின்றி ..திசையின்றி ஏக்கப் பார்வைகளுடன் .....

இன்று நாங்கள் அணிந்திருக்கும் புத்தாடை புது மோஸ்தரில் இல்லை எனப் புலம்புகின்றோம் பாருங்கள் பலருக்குப் போடுவதற்கு பழந்துணி கூட இல்லை.

செய்த பலகாரங்களில் சீனி குறைவு என அங்கலாய்ப்பவர்கள் எம்மவர்கள் பலர்.பசிக்கு விரல் நகங்களை உணவாக்கும் பரிதாப ஜீவன்கள் எத்தனை. தெருத் தெருவாய்... பெரிய வீட்டிற்கு எந்தக் கலரில் பெயின்ட் அடிப்பது என மூளையைக் குழப்பும் எங்கள் வீட்டிற்கு அருகில் தான் முடங்கக் கூட இடம் இல்லாமல் எத்தனை பிளட்பாரத்துப் பிரஜைகள்... இப்படி... இப்படி... எத்தனை!

மத்தாப்பு வெடிகளையும், பட்டாசு வெடிகளையும் பற்ற வைத்துக் கொண்டிருக்கும் போது எம்முன் கடந்த வருடம்... அதன் முன்னைய வருடங்களில் எம்முன் இருந்தவர்கள் அநியாயமாகவும், அக்கிரமான வழிகளாலும் தீயிலே பஸ்பமாகிப் போனதையும் மறக்காது நினைத்துப் பார்ப்போம். வேதனைகளையும், துன்பங்களையும் சுமந்தவர்களைத் தாங்கிக் கொள்ளத்தான் முடியாது-ஆனால் தடவிக் கொடுக்கலாம் இல்லையா? கை கொடுக்கத்தான் முடியாது ஆனால் அவர்களின் கண்ணீரைத் தானும் துடைக்கலாம் அல்லவா? அவர்களின் வேதனைகளைத் தான் எம்மால் விலை கொடுத்து வாங்கமுடியாது. சில ஆறுதல்களையாவது அள்ளிக் கொடுக்கலாம் அல்லவா? நான், எனது குடும்பம்-அதன் சுகம் - நலம் .. இவ்வளவு மட்டும் தான் சாஸ்வதம் என்றில்லாமல் - அயலவன் சமூகம்... மக்கள்... நாடு... இப்படி இப்படி... எல்லாவற்றின் மீதும் பிரக்ஞையுடன் இருப்போம்... இன்று எங்கள் வீட்டிலே ஏற்றி வைத்த விளக்கின் ஒளி வெளியிலும் பரவட்டும்!

தரிசினி

## நிதியுதவி

உலகவங்கியின் நிதியுதவியாக இலங்கைக்கு 3பில்லியா ரூபா கிடைக்கயுள்ளது. இது தொடர்பாக ஆராய வாஷிங்டனில் உள்ள உலகவங்கி தலைமையகத்தில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தலைமையிலான இலங்கை குழுவொன்று வாஷங்டன் சென்றமை தெரிந்ததே.


சீரெல்லாம் அள்ளித்தருமே சித்திரைப்புத்தாண்டு
பாரெல்லாம் நல்வாழ்வு பெற்றிட வாழ்த்துவமே

சிலோன் செரமிக் கோப்பரேசனின் ஏகவினியோகஸ்தர்கள்

★ மாபிள்ரைல்ஸ் (Marble Tiles)
★ பீங்கான் ஊவூட் கதவுகள்
★ எஸ்லோன் பைப்வகைகள்
★ ஊஷா குளிர்சாதனப் பெட்டிகள்
★ மோட்டார் வகைகள்
★ ஊஷாமற்றும் கே.டி.கே.மின்விசிறிகள்
★ எலக்றிக்கல்ஸ்

ஆகியவற்றிற்கு

நியூ விமாகி

27/3 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

04125


# செய்தி மஞ்சரி

## மறந்தாலும் விடமாட்டேன்

இன்று இரவு 9.30 மணிக்கு வானொலியில் புத்தாண்டு விசேட நாடகமாக திரு கே எஸ் பாலச்சந்திரன் எழுதிய "மறந்தாலும் விடமாட்டேன்" என்ற நகைச்சுவை நாடகம் ஒலிபரப்பாகிறது. இதனை திரு. ஜோர்ஜ் சந்திரசேகரன் தயாரித்தளிக்கின்றார்.

## அபிவிருத்தி அவசியம்

மூதூர் இறங்குதுறையில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்று பொதுமக்கள் கோருகின்றனர். நீண்ட காலமாக இது அபிவிருத்தி எதுவுமின்றி சீர்கெட்டுள்ளது. இதனால் மூதூர் திருகோணமலை கடல் மார்க்கச் சேவையில் லீடுபடும் மோட்டார் படகுகளில் பயணம் செய்யும் பயணிகள் பலதரப்பட்ட சிரமங்களைப் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

## போலி கண்டுபிடிப்பு

ஹத்தரலியத்த பொலிஸ் பகுதியைச் சேர்ந்த புதுக்கமன என்ற இடத்தில் பொலிஸார் ஒருநபரைக்கைது செய்து போலியான ஏழு இரண்டுரூபாக குற்றிங்களையும் புளொக்குகளையும் அலுமினியம் உருக்கப் பயன்படும் விளக்கு ஒன்றையும் கைப்பற்றினர்.

## நூல்கள் அன்பளிப்பு

இங்கிலாந்து ஏங்சோலி நூலக சேவை நிறுவனம் மூலம் பெறப்பட்டதான எழுபதாயிரம் ரூபா பெறுமதியான ஆங்கில நூல்களை திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் இப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கும் பொது நூலகங்களுக்கும் இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

## தொண்டர் பயிற்சி

நெடுங்கேணி உதவி அரசங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பட்டிக் குடியிருப்புப்பகுதியில் புனர்வாழ்வுத் திட்டத்துடன் இணைந்ததாக யுனிசெவ் நிதியுதவியுடன் 30 சுகாதாரத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பகுதியிலுள்ள கிராமங்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 350 மலசல கூடங்களும் அமைக்கப்படவுள்ளன, யுனிசெப் நிறுவனத்தின் மூலம் இதற்கென ஒரு மலசல கூடத்திற்கு 2500 ரூபாவும் சுகாதாரப் பகுதியினரால் 700 ரூபாவும் வழங்கப்படவுளளது,

## முனைப்பான செயற்பாடு

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயஅதிபர் திரு, வே. சண்முகநாதன் சக ஆசிரிய, ஆசிரியைகளினதும் பெற்றோரினதும் ஒத்துழைப்புடன் வித்தியாலய வளர்ச்சிகருதி பல முன்மாதிரி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார்.

## யாழ்.வருகின்றார்

திறந்த பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் டி.எஸ் விஜயசேகர எதிர்வரும் 28-ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையம் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர் இங்கு ஆலோசனை நடத்துவார்.

## குறைபாடு தீர்க்கப்படும்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியரின் குறைபாடுகள் விரைவில் தீர்க்கப்படும் என்று புதிய தலைவர் திரு உபாலிசில்வா உறுதியளித்துள்ளார்.

இக் கூட்டுத்தாபனத்தலைவராக நியமிக்கப்பட்டதும் அவர், கூட்டுத்தாபனம் சிறப்பாக இயங்கப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். தொழிற்சாலை ஊழியரின் சம்பளப்பிரச்சினை மற்றும் குறைபாடுகளை அகற்ற அவர் நடவடிக்கை எடுத்துள்ளார் 1985 -ம் வருடத்திற்குப் பின்னர் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்க்குக் கிடைக்கப்பெறவில்லை என்பதைக் கண்டறிந்த அவர் விரைவாகப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்.

## சப் - இன்ஸ்பெக்டர் கைது

ஹொரணப் பொலிசைச்சேர்ந்த சிலர் தன்னைப் பலவந்தப் படுத்தியதாகப் 17 வயதுப் பெண் ஒருவர் செய்த புகார் மீதான விசாரணையில் அடையாளம் காணப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கைதானதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இப்பெண்ணின் வீட்டுக்கு அதிகாலை 3.30 மணியளவில் சென்று அவரை வெளியே கொண்டு சென்று பலவந்தம் செய்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டது.

## ஏப்ரல் வசந்தம் ஆரம்பம்

நுவரெலியாவில் ஏப்ரல் வஸந்தகால நிகழ்ச்சிகள் கடந்த முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுவிட்ட போதிலும கடந்த 7-ம் திகதியிலிருந்து வெளி மாவட்டங்களிலிருந்து வசந்தகாலத்தைக் களிப்பதற்காக மக்கள் வருகை தந்த வண்ணமுள்ளனர். 14, 15-ம் திகதிகளில் வசந்தகால நிகழ்ச்சிகளில் ஒன்றாக மோட்டார்க்காரோட்டப் போட்டிகள் இடம் பெறவுள்ளன. குதிரை ஒட்டப்பந்தயமும் நடைபெறும்.

# "புதுவருட ஸ்பெஷல் 'கொடிபறக்குது'..."

# "எங்களுக்கு இப்பதான் வழிபிறக்குது.."

...''என்ன...... வீதியால போக முடியாமக் கிடக்கிது... இவ்வளவு சனமும் இஞ்ச தான் இருந்ததுகள்... எனக்கு ... நம்ப முடியாமக்



பயப்படாதீர்கள்...... எல்லாம் நல்லதற்கே

கிடக்கிது'' என்று கூறியவாறு ஒரு பெரியவர் சயிக்கிளில் ஏறி ஓடமுடியாமல் உருட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இப்போதுதான் மக்கள் பெருந்தொகையாக யாழ்நகர வீதிகளில் உலா வருவதைக் காணமுடிகின்றது. புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற உற்சாகம் அவர்களது உள்ளத்தில் மட்டும் அல்ல வதனங்களிலும் காணமுடிந்தது.

சிறைக்குள் இருந்து விடுதலை கிடைத்தது போன்ற உணர்வு

**உதரன்**

மக்களிடையே காணப்படுகின்றது. புத்தாண்டு வியாபாரம் என்றுமில்லாதவாறு களை கட்டியிருக்கின்றது.

தென் இலங்கை வியாபாரிகளும் இங்கு வந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். நீண்ட கால இடைவேளைக்குப் பின் மீண்டும் சிங்கள ஒலியையும் சிங்களத்தில் பெயர்கள் பொறிக்கப்பட்ட லொறிகளையும் காணமுடிகிறது.

சில சிங்கள வியாபாரிகள் தங்கள் பழைய நண்பர்களைத் தேடி குசலம் விசாரிக்கின்றனர். தாங்கள் வியாபாரத் தொடர்பு வைத்திருந்த கடைகளைத் தேடுகின்றனர்... கடைகள் கடைகளாக இருந்



மழையா? குளிரா? கலங்கேன்

தால்தானே... அவர்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

கடந்தகால கொடுமையான நிகழ்வுகளை கற்பனையில் கண்டவர்கள் இப்போது நேரடியாகப் பார்க்கின்றனர். இப்போது அவர்களுக்கு தமிழர்கள் பட்ட துன்பங்கள் நன்கு புரியும்...

கடந்த காலங்களில் நாம் பட்ட வேதனைகள் சோதனைகள் இலகுவில் சொல்லி விட முடியாது. கடந்த கால நிகழ்வுகள் மீண்டும் ஏற்படக் கூடாது என்பதே இன்று மக்கள் பலரது பிரார்த்தனையாகும்.

பிறக்கின்ற பிரமோதூத புத்தாண்டை புதிய எதிர்பார்ப்புகளுடன் மக்கள் வரவேற்கின்றனர்கள். இப்புத்தாண்டு பற்றி நாம் யாழ் நகரில் சிலருடன் உரையாடினோம். எம் கவனத்தைக் கவர்ந்த சிலரை அவர்கள் எதிர்பார்க்காத நேரத்தில் கமராவுக்குள் புகுத்திக்கொண்டோம். இன்னும் சிலரை புக வைக்க முயன்றோம். ஆனால் முடியவில்லை. அவர்கள் தப்பித்துக் கொண்டனர். எம் கமறுவுக்குள் சிக்கியவர்களைத் தான் படத்தில் காண்கின்றீர்கள்.

இந்த சந்தையிக்க ... நிம்மதியா வியாபாரம் செய்து எவ்வளவு நாளாச்சு மோன... இப்பதான் நிம்மதியா இருந்து வியாபாரம் செய்யிறம். வருசம் பிறக்கிறது. பிறக்கிற வருசம் சந்தோசமான வருசமா இருக்க வேணும் எண்டுறதான் எங்கட பிரார்த்தனை என்றார் யாழ் நகர சந்தையில் வியாபாரம் செய்யும் பெண்மணி.

அவரின் எதிர்பார்ப்பை கேட்டவாறு மறுபக்கம் திரும்பினோம். வியர்வை சிந்த மாமூடை ஒன்றைச் சுமந்தவாறு சென்று கொண்டிருந்தவர் எம் கவனத்தைக் கவர்ந்தார். அவருடன் உரையாடியபோது "தம்பி பிரச்சினைக் காலத்தில நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல... சாப்பிடவே திண்டாடின காலமும் இருந்தது ... பிள்ளையள வாழ வைக்க நான் நிறையக் கடன் வாங்கியிருக்கிறன். புதுவருசத்தில பிரச்சனையள் வராட்டி எப்படியும் கடனை அழிச்சுப் போடுவன்'' என்றார்.

அவருடைய மனத்துணிவை எண்ணி வியந்தவாறு நடக்கின்றோம் வீதிகள் எங்கும் பெண்கள் மயம்தான். ஆண்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. பெண்கள் எல்லோரும் புடைவைக் கடைக்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

நாமும் புடவைக்கடை ஒன்றுக்குள் நுழைந்தோம், வாங்கோ...... வாங்கோ......... புது அயிற்றம்ஸ் வந்திருக்கிது...... இந்த சாறிய பாருங்கோ...... புதுவருசத்துக்கு வந்த ஸ்பெஷல் ...... என்கிறார் புடவைக்கடைக்காரர்...... சாறிக்குப்பெயர் என்ன... 'கொடி பறக்குது'...... பெயர் கேட்ட பெண்களுக்கு சிரிப்பு வந்துவிட்டது... அவர்களுக்கு மட்டும் என்ன. எமக்கும் சிரிப்பாகத் தான் இருந்தது எதற்கு எப்படி பெயர் வைப்பது என்று தெரியவில்லை... சினிமா மோகம் கண்ணை மறைத்து கொண்டு நிற்கின்றது.

புடவைக் கடையில் இருந்து நழுவி, வீதியில் வருகின்ற போது செருப்புத் தைப்பவர் ஒருவரைத் சந்தித்தோம். எப்படிப் புதுவருசம்....என்றோம்... இப்ப உழைப்புக்கு குறைச்சலில்லை... இப்படியே நாட்டு நிலமை நல்லா இருந்தா...எங்கட வீட்டிலும் அடுப்பு எரியும்... இல்லாட்டி ... எங்கட



விடிவு கிடைக்குமா?

வாழ்க்கை ஒரே சோகம் தான் என்றார்.

இவரிடம் கதை கேட்டுக் கொண்டு நிற்க வயதுமுதிர்ந்த பிச்சைக்காரர் ஒருவர் பால் பேணி ஒன்றை குலுக்கி எம் கவனத்தை தம்பக்கம் திருப்பினார்...ஐயா...புதுவருசம் வருகுது... எதாவது... தந்திட்டுப் போங்க ஐயா... அதுசரி ... இந்த புடவைக்கடைகள் இருக்கிற பக்கம் சுத்திச் சுத்தி அலையிறியே ஏன்... இப்ப கோவில் குளதுக்கு சனம் குறைவு...புடவைக் கடைக்குத்தான் பெருவாரியா வருகுதுகள்... இஞ்ச இருந்தாத்தான் காசு கிடைக்கும்... ஐயா ஏதாவது தந்திட்



துணிந்து நில் தோல்வியில்லை

டுப் போங்க... உங்களுக்கு புது வருசத்தில் பணம் பணமா கிடைக்கும் ஐயா... ஐயா நீங்கள் நல்லாஇருக்க வேணும்...' பிச்சைக்காரரின் வாழ்த்தைப் பெற்றுக் கொண்டு யாழ் நகரைற் சுற்றி நடக்கின்றோம்...

குடுகுடுப்பை சாத்திரி ஒருவர் எம்மை எதிர்கொண்டார்... 'ஐயா உங்களுக்கு அதிர்ஷ்டம் கிட்டிக் கொண்டிருக்கிது... கவலைப்படாதீங்க... என்று எமக்கு தனது ஏமாற்று வேலையைக் காட்டலானார்... புதுவருடம் எப்படி உங்



தெருவென்ன? சத்திரமென்ன?

களுக்கு என்று முதலில் சொல்லுங்கள்... முந்தி எனக்கு உழைப்பு இவலை இப்ப நல்ல உழைப்பு வருகிது...... சாத்திரத்தை நம்பிறுக்கள் இருக்கும் வரைக்கும் எங்கட தொழிலுக்குபிரச்சனை இல்ல...வருசம் பிறந்தா எங்களுக்கு காசுக்கு குறைவில்ல ..... என்று கூறியவாறு மெல்ல நழுவிவிட்டார்.

கச்சேரி மினி பஸ் ஒன்றில் ஏற முயன்ற கால் ஊனமுற்ற ஒருவரைச் சந்தித்தோம்... 'எங்களைப்பற்றி எவருமே அக்கறை காட்டிறதா தெரியேல்ல... புதுவருசத்திலயாவது எங்களுக்கு புதுவாழ்வு கிடைக்க வேணும் இதுதான் என்னுடைய ஆசை...என்றார்.

அவரது வேதனையில் நாமும் பங்கு கொண்டவாறு மீண்டும் நகரை வலம் வருகிறோம்... மாட்டு வண்டிலை மாடு பூட்டாமல் ஒருவர் கொத்து விறகேற்றித் தள்ளிக் கொண்டு வருகிறார்.

'புதுவருசம்...கோலாகலமா இருக்கிது என்டிறதுக்கு...பணியாரம் சுட நான் ஏற்றிக் கொண்டு போறவிறகு நல்ல உதாரணம்... புதுவருசம் எங்களப்போலஏழையின்ரவீட்டில அடுப்பு எரிய வைச்சா சரி... என்று, இவர் கூற எமக்கு அருகில் நின்ற வயதுமுதிர்ந்த அம்மையார் இருவர் தங்களுக்குள் இப்படி உரையாடினர்... 'எப்பிடி புதுவருசம் எல்லாம்... பிள்ளையள் அடிக்கடி எனக்கு உடுப்புகள் அனுப்புதுகள் ...தினமும் எனக்குப் புதுவருசம்தான்... 'உனக்குப் எப்பிடி வருசம்...ம்... பிள்ளையள் எல்

## நேரடி ரிப்போட்

லாம் வெளி நாட்டில்......

இஞ்ச ஆர் இருக்கினம். புது வருசம் கொண்டாட... என்று கூறி மீண்டும் பெருமூச்சு விட்டார் அம்மையார்...

அவர்களது கதையைக் கேட்டுக்கொண்டிருந்த எம்மை எம் கண்கள் தாயாருடன் உரையாடிக்கொண்டு சென்றுகொண்டிருந்த சுரேன் என்ற 12 வயதுச் சிறுவன்பக்கம் திரும்பின.

புதுவருடத்துக்கு என்ன செய்யப் போறீங்க தம்பி... "நான்... புதுச் சட்ட போட்டுக்கொண்டு யாழ்ப்பாணத்த சுத்திவரப்போறன் என்றார் செல்லமாக


நாம் நகரைச் சுற்றியது போதும் என நினைத்துக் கோட்டைமுனியப்பர் கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை திடீரென ஏற்பட்டது . நடக்கத் தொடங்கினோம்... பக்தர்கள் பலர் முனியப்பர் கோவிலில் சுவாமியைத் தரிசித்த வண்ணம் இருந்தனர்.

நாம் சுற்றி எல்லோரையும் நோட்டம் விட்டோம்... இருபது வயது மதிக்கத்தக்க இளம் பெண்... கண்ணீர் மல்க இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தாள்... அவளிடம் உரையாட....

எப்படிக் கதைப்பது...தயங்கித் தயங்கி...''ஏன் அழுகின்றீர்கள்... என்றோம்... அப்பெண் மேலும் அழலானாள்...

அந்த இளம்பெண் அழுகையை நிறுத்தி... என் குடும்பத்தில் உள்ள அனைவரும்... இராணுவத்தினரால் கொல்லப்பட்டுவிட்டனர். நானும் தம்பியும் தான் இருக்கிறோம்...அப்பா அம்மா இருந்திருந்தால் நாங்களும் எல்லா

ரையும் போல புது வருசத்த கொண்டாடியிருப்பம் தான... எங்களை அரவணைக்க... அப்பா அம்மா இல்லையே .. நாங்கள் இப்ப அனாதைகள்...! அனாதை



தலை' பாரமா?... இல்லை

கள்...! ஆதரவு அற்ற அனாதைகள்...

எம் இதயத்தில் பல துளைகள் விழுநதுவிட்டது போன்று இருந்தது... அந்தப் பெண் சொன்ன வார்த்தைகள்... ஒவ்வொன்றும்...! எமக்கு எழுத வார்த்தைகள்... வரவில்லை... கண்களில் இருந்து கண்ணீர் தான் வந்தது ...

கடந்த காலங்களைத் திருப்பிப் பார்க்கின்றோம். எத்தனை இழப்புக்கள் .. எத்தனை வேதனைகள்......கவலைகளின் சுமையைச் சுமக்க முடியாமலும் இறக்கி வைக்க முடியாமலும் தவிக்கும் இதயங்கள் பல...... சில இதயங்கள்... அழுகின்றன... வேறு சில இதயங்கள் மௌனமாகி விட்டன......

கவலைகளை வெளிப்படுத்தி விடவேண்டும்... வார்த்தைகளால் சொல்ல முடிய விடில் கண்ணீரால்...... கவலைகளை மறக்க முடியவில்லையென்றால் வேதனைமேல் வேதனையைத் தந்துவிடும்......

எத்தனையோ இதயங்கள் புதுவருடக் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியோடு கொண்டாட முடியாமல் தவிக்கின்றன ..... ..... மேற்கொண்டு அவ்விடத்தில் நிற்க விரும்பாமல்... எமது நேரடி ரிப்போட் பயணத்தை இடையில் நிறுத்தி முரசொலி அலுவலகம் நோக்கி நடக்கத் தொடங்கினோம்... எம் சிந்தனைகள்... முனியப்பர் ஆலயத்தைச்



சக்கரம் நகரவில்லையா?

சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தன ...

பக்கத்து வீட்டில் பரிதாபம்.. இங்கே பால்பாயாசம்.

புதிய ஆண்டு மலருது புதிய நம்பிக்கை பிறக்குது
உதயமாகும் ஆண்டில் நல்வாழ்வு மலரப் போகுது

அனைவருக்கும்
எமது
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான

ரப்பர் ஸ்டாம்ப்
பிளாஸ்ரிக் போட்
மற்றும் புளொக் வேலைகளை
நல்ல முறையில் செய்து தருபவர்கள்

ஆர்ட் கிராபிக்ஸ்
538 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
04122



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்




அண்ணா பற்பொடி
பக்கட் ஒன்றின் விலை 50 சதம்
04132



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்

உங்களுக்குத் தேவையான
சகலவித அன்றாட உபயோகத்திற்கான
மின்சார உபகரணங்களை நியாயமான
விலைக்குப் பெற்றுக்கொள்ள

★

ஏ.ஜி.எலக்றிக்கல்ஸ்

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
மறுமுறை நீங்களாகவே வருவீர்கள்

A. G. ELECTRICALS
40/28 Stanley Road, Jaffna
04127


# தேசிய ஒற்றுமை விழாவாக மேதினம் கொண்டாடப்படும்

## ஜனாதிபதி பிரேமதாச

எதிர்வரும் மேதினத்தை தேசிய ஒற்றுமை தினமாகக் கொண்டாட சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ கூறியுள்ளார்.

"இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக ஐ. தே. க. தொழிற் சங்கவாதிகளும், ஏனைய உறுப்பினர்களும் கொழும்புக்கு அவசியம் வர வேண்டும். ஆனால் இப்படி வருவோருக்கு பணம், இலவச போக்குவரத்து வசதி, உணவு எதுவும் கொடுக்கப்பட மாட்டாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புத்தளம் தொகுதிக்கு விஜயம் செய்து ஐ. தே. க. உறுப்பினர்கள், வாலிப மகளிர் உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய முஸ்லிம் சமய கலாசார விவகார ராஜாங்க அமைச்சர் அல்ஹாச் ஏ. எச். எம். அஸ்வர், ஐ. தே. க. எம்பிக்கள், மாகாணசபை உறுப்பினர்கள் நகரசபை உறுப்பினர்கள் ஆகியோரும் மேதின விழாவைத் தேசிய ரீதியில் கொண்டாட ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென ஜனாதிபதியால் கோரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# ஹமீத்திற்கான பாதுகாப்பு விடுதலைப்புலிகள் பொறுப்பில்

நேற்று யாழ்நகருக்கு விஜயம் செய்யும் ஜனாப் ஏ சி. எஸ் ஹமீத்துக்கு பலாலி விமான நிலையத்தில் இருந்து விடுதலைப் புலிகளே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒருவருடமாக ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு முயற்சிகள் மேற்கொண்டதாகலேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவரை சந்திக்கின்றார் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மந்திகை வைத்தியசாலைக்கு திருமதி பாலசிங்கம் விஜயம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வெள்ளியன்று திருமதி அன்ரன் பாலசிங்கம் திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டார். வடமராட்சி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் குணமும் அவருடன் விஜயத்தை மேற்க் கொண்டார்.

திருமதி அன்ரன் பாலசிங்கம் சகல வார்ட்டுகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டதுடன் நோயாளர்கள், தாதிகள், வைத்தியர்களிடமும் வைத்தியசாலை சீர்கேடுகள் பற்றி விபரம் சேகரித்தார்.

(39,44)

### முதலாம் ஆண்டு அனுமதியில்

# அதிபருக்கு எதிராக நடவடிக்கை பெற்றோருக்கு அதிகாரம்

பாடசாலைகளின் முதலாம் ஆண்டு வகுப்பில் மாணவர்களை சேர்ப்பது தொடர்பாக அநீதியாக நடக்கும் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்க பெற்றோருக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிப்பது தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில் இவ்வறிவித்தலை கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த

# வவுனியா-திருமலை பஸ்சேவை மீண்டும் நடைபெறுகின்றது

நீண்டகாலமாக இடை நிறுத்திவைக்கப்பட்டிருந்த வவுனியா திருமலை இ, போ. ச. சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சாலை இந்த சேவையினை நடத்துகிறதுஎன மேற்படி சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

தினமும் வவுனியாவிலிருந்து காலை 8 30 மணிக்கு புறப்படும் இந்தபஸ் மீண்டும் திருமலையிலிருந்து ஒரு மணிக்கு புறப்பட்டு வவுனியாவிற்கு பிற்பகல் 4மணிக்கு வந்தடைகின்றது.

(11)

# யாழ் வைத்தியசாலை சிற்றூழியா நேர்முகப்பரீட்சை

யாழ் போதனாவைத்தியசாலை சிற்றூழியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23ம் திகதி நடைபெறுமென தெரியவருகின்றது இந்த நேர்முகப் பரீட்சையை சுகாதார அமைச்சில் இருந்துவரும் அதிகாரிகளே நடாத்துபவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் திகதி குறிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

(03)

### கிளிநொச்சி பஸ்நிலையம்

# தகரக் கொட்டில்தான்; அதுகூட ஒழுங்காக இல்லை

கிளிநொச்சி. மத்திய பஸ் நிலையம் மிகவும் சீரழிந்த நிலையிலும் வெய்யில் மழைக் காலங்களில் பிரயாணிகள் தரித்து நிற்கவே முடியாத நிலையில் நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இந்தப் பேருந்து நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு நூற்றுக் கணக்கான பிரயாணிகள் உள்ளூர், வெளியூர்ப் பயணங்களை மேற் கொள்கின்றனர்

நகர்ப் பேருந்துக் கட்டம்மிகவும் துருப்பிடித்த தகரத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது அதுவும் தகரம் கிளிந்துவ. அமைப்புக்கள் உருக்குலைந்த நிலையிலும் உள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள பிரயாணிகளை விட கிளிநொச்சி நகருக்கு வெளி இடங்களில் இருந்து வந்து போவபர்களே மிகவும் அதிகமாக உள்ளனர்.

தற்போது கிளிநொச்சி வடபகுதியிலேயே முக்கிய வியாபாரக் கேந்திர நிலையமாக மாறிவருகிறது. இப்படியான இடத்தில் மிகவும் சீரழிந்த நிலையில் பஸ் நிலையம் இருப்பதைப் பார்க்க வெட்கமாக இருக்கிறது என்று கிளிநொச்சி மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் திரு. கோபி தெரிவித்தார். பஸ் நிலையத்தை புனரமைக்க பொதுஸ்தாபனங்கள் முன் வந்து உதவியளிக்க வேண்டும் என்றும் கிளிநொச்சி இ. போ ச சாலையில் இதைப் புனரமைக்க வேண்டிய பணம் இல்லை எனவும் பஸ்நிலையத்தை புனரமைக்க முன் வரும் பொதுஸ்தாபனம் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

(35)

# 4 'எக்ஸ்ரே' கருவிகளே உண்டு இவற்றில் 3 செயலிழப்பு

யாழ் போதனா வைத்திய சாலையில் இதுவரை உபயோகத்திலிருந்த நான்கு 'எக்ஸ்ரே' இயந்திரங்களில் மூன்று பழுதடைந்து விட்டதால் சத்திர சிகிச்சைகள் யாவும் பிற்போடப்பட்டு வருகின்றன. மிகவும் அவசர சத்திர சிகிச்சைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்கள் விரைவில் திருத்தப்படாவிட்டால் பலவித இன்னல்களை நோயாளர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது

# உயிருடன் இருப்பவருக்கு இறப்பிற்கான நஷ்டஈடு

உயிருடன் இருக்கும் ஒருவர் 10 மாதங்களுக்கு முன் எகிப்தில் விபத்தில் இறந்து போனதாகக் கருதப்பட்டு அவருக்குரிய 6 000டொலரை சவூதியில் உள்ள ஒரு ஸ்தாபனம் அனுப்பிவைத்துள்ளது அதுமட்டுமல்லாது அவரது உடைகள், உடைமைகள் உட்பட குடும்பத்திற்கு பணமும் அனுப்பிவைக்கப்பட்டதோடு அவரின் ஈமைக்கிரியைகள் முடிந்து விட்டதற்கான அத்தாட்சிப் பத்திரமும் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி கடவுச் சீட்டு இரண்டு வருடங்களுக்கு முன் தொலைந்து போனதாகவும் வேறு ஒரு நபர் அதை வைத்து சவூதிக்கு சென்றிருக்கலாம் என்றும்தற்பொழுது கருதப்படுகின்றது. உண்மையாக இறந்து போன நபரை பொலிஸார் கண்டு பிடிப்பதில் இறங்கியுள்ளனர்.

# 'தனி மனித சுதந்திரத்திற்கு ஊறு விளையவே கூடாது'

''மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்ருக மதச் சுதந்திரம் அமைகின்றது. இதனை ஒரு மனிதனே அல்லது சமூகமோ அனுபவிக்கத் தடையாக இருப்பது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமையும் அது ஜனநாயகத்துக்கும் ஊறு விளைவிக்கும்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் கூறினர்.

காத்தான்குடி பத்தி ஈயா ஜும்மா பள்ளிவாசலுக்கு ஒலி பெருக்கி பாவிப்பதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியதற்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வைபத்திலேயே அவர் இவ்வாறு சொன்னர்.

''வடக்கு கிழக்கில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வருவதற்கே நாம் போராடி வருகின்ரேம். இதேவேளையில் எந்த ஒரு மனிதனும் பாதிக்கப்படுவதற்கு நாம் விடமாட்டோம். ஒரு நாட்டில் உறுதியான ஆட்சி நிலவுவதற்கு இராணுவ பலம் அத்தியாவசியம். இது எம்மிடமுள்ளது, எனவே எதிர்காலத்தில் ஓர்நிலையான ஆட்சியை நாம் ஏற்படுத்துவோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கிளி. இலங்கை வங்கியில் சேமிப்பு வாரம் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி இலங்கை வங்கியில் புதுவருடத்தை முன்னிட்டு முதன்முறையாக சம்பிரதாய முறைப்படி கைவிசேடம் வழங்கப்படுவதுடன் இவ்வாரம் தொடக்கம் மூன்று வாரங்கள் சேமிப்பு வாரங்களாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வருட தமிழ் சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் இன்று பதின்நான்காம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படும் சேமிப்பு வைப்புச்சான்றிதழ் கணக்கை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கு கைவிசேடமாக புதிய ஐந்து ரூபா நாணயங்கள்வழங்கப்படும்.

கடந்த நான்காம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரையும் இக்கிளையில் சேமிப்பு வாரம் கொண்டாடப்படும் புதுவருடத் தினத்தன்று நகரில் விசாகாட் முறையும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (35)

### 17ம். 18ம் திகதிகளில்

## யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தமிழ்தினப் போட்டிகள்

ஏப்ரல் மாதம் 17ம், 18ம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மாவட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன, கோட்ட மட்டங்களில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட மாணவர்களை பாடசாலை அதிபர்கள், பொறுப்பாசிரியர்களுடன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

17ம் திகதி எல்லாப் பிரிவுகளுக்குமான வாசிப்பு.எழுத்து ஆக்கம், பேச்சு, விவாதம்: சொல்வதெழுதல் நடைபெறும். 18ம் திகதி எல்லாப் பிரிவுகளுக்குமான பா ஓதல். இசை, நடனம் நாடகம் இடம் பெறும். அன்றைய தினம் மேற்படி நிகழ்ச்சிகளில் இசை, நடனம், நாடகம், போட்டிகளில் பங்கு கொள்ளும் மாணவர்கள் ஆசிரியர்களின் வசதியைமுன்னிட்டு யாழ் மாவட்டத்தில் மட்டும் 18ம் திகதிக்கான வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

18ம் திகதியில் வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில பங்கு கொள்ளுபவர்கள் அதற்குரிய பரீட்சகர்களுடன் தொடர்பு கொண்டு மாற்று திகதியை பெற்றுக் கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## ரயிலில் வந்த இரு சிறுர்கள் யாழ், புகையிரத நிலையத்தில்

வியாழன்காலை கொழும்பில் இருந்து புறட்டும் மெயில் ரயிலில் வந்த இரு சிறவர்கள் யாழ் புகையிரத நிலையத்தில் அனாதரவாக கைவிடப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு விவேகானந்தவில் கல்விசற்கும் இந்த இரு சிறுவர்களும் சகோதரர்களாகும். ஊறுகொட உத்தையில் தாம் வசிப்பதாகவும் அப்பாவின் பெயர் ருக்கா அம்மா பெயர் கமலம் என்றும் தாம் மச்சான் ஒருவருடன் வந்ததாகவும் அச் சிறுவர்கள் தெரிவித்தனர்.

சந்திரகுமார் (9) ரமேஸ்குமார் (8) என்ற இரு சிறுவர்களே தவறவிடப்பட்டவர்களாகும். இவர்கள் இருவரும் தற்போது யாழ் புகையிரத நிலைய அதிகாரிகளின் பாதுகாப்பில் உள்ளார்கள். (03)

## பாடசாலையில் தளபாடம் இல்லை

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கிழக் கெல்லைக் கிராமங்களான கட்டைக்காடு, நித்திய வெட்டை, கேவில், போக்கறப்பு கிராமங்களுக்கு விஜயம் செய்த யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருடிவகலால அலுவலக உத்தியோகத்தர்களுடன் போக்கறப்பு சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலைக்கு சென்றபோது 40வரையிலான மாணவர்கள் பயிலும் இப்பாடசாலையில் பழுதடைந்த நிலையிலுள்ள ஒரு சில தளபாடங்கள் தவிர எவ்வித தளபாடங்களும் இல்லாதது கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார். இரு ஆசிரியர்கள் படிப்பிக்கும் இப்பாடசாலையில் ஆசிரியர்களுக்கான மேசை, கதிரைகூட இல்லை யென பெற்ருேர் அதிகாரிகளுக்கு முறையிட்டனர். (18)

## எரிபொருள் தட்டுப்பாடில்லை வியாபாரிகள் பதுக்குகிருர்கள்

யாழ் மாவட்டத்தில் கடந்த வாரத்தில் இருந்து ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு தற்போது முற்ருக நீங்கியுள்ளதாக பெற்ருேலிய கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனல் வியாபாரிகள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எரிபொருட்கள் சேமித்து வருவதாக தெரியவருகின்றது. இதனலே தற்போது நகரில் எரிபொருட் தட்டுப்பாடு நிலவுவதாக மேலும் தெரியவருகின்றது. (03)

## வல்வை பருத்தித்துறை காவல் நிலையங்கள் மூடப்பட்டன

பருத்தித்துறை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்கள் புதன் முதல் மூடப்பட்டன

செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பொலிஸ் பொதுமக்களின் மோதலின் விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்ததன் பயனுக புதன் நண்பகலுடன் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துடன் வலவெட்டித்துறைபொலிஸ்நிலையமும் மூடப்பட்டது. (44,39)

## சாரணர் ஆசிரியர்களுக்கு காங்கேசனில் பயிற்சிவகுப்பு

சாரண ஆசிரியர்களாக நியமனம் பெற விரும்புவோர்க்கான முதற்கட்டப் பயிற்சி இம் மாதம் 15-ம் திகதி மாலை 2.00 மணிக்கு மாவை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் உள்ள காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத் தலைமையலுவலகத்தில் நடைபெறும்.

3 30 மணிக்கு ஆரம்ப வைபவம் பூர்த்தியாகி மறு நாள் 16 4. 90 முதல் 17.4. 90 வரை பயிற்சி தொடர்ந்து நடைபெறும். இப் பயிற்சியை திரு. க யோகன் நெறிப்படுத்துகிருர். சாரண அனுபவத்தை அளிக்கும் இவ் ஆரம்ப பயிற்சியைப் பெறுபவர் ஓர் சாரணர் அல்லது குருளைச்சாரணர் குழுவினை ஆரம்பிக்கவோ வழிநடத்தவோ வேண்டிய அறிவினைப் பெறுவர். என்றும் இவ்விதம் பயிற்சி பெற்ருேர் சாரணர் குழுக்களை ஆரம்பித்து திறம்பட நடத்துவதன் மூலம் எமது இலட்சியங்களை இலகுவாக சாரணியத்தின் மூலம் அடையலாம்.

சிரேஷ்ட சாரணர், சாரணர்களுக்கான அதி உயர் பயிற்சி 15ம் 16ம் திகதிகளில் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வங்கியில் கைவிசேஷம்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் புத்தாண்டு தினமான இன்று காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரை வங்கி வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் சேவையாற்று முகமாக திறந்திருக்கும்.

அதிகரித்த வட்டி வீதத்தில் சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு சிற்றுண்டி வகைகளும் கைவிசேஷமாகப் புதியநாணயங்களும் இன்றைய தினம் வழங்கப்படும்.

எண்ணம் போல் வாழ்வு மலருமே!
ஏற்றங்கள் யாவும் நிகழுமே!
சித்திரைப் புத்தாண்டே வருக!
சிறப்புக்களை அள்ளித்தருக!

★ நவநாகரிகப் புடவைத்தினுசுகள்
★ கூறைச் சேலைவகைகள்
★ றெடிமேட் உடுப்புக்கள்

முதலியவற்றை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய

சிங்கம்'ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
172 (84) கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

04123

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கும்
வெளிப்புறக் கலர் படப்பிடிப்பிற்கும்
வீடியோ படப் பிரதிகளை வாடகைக்குப் பெறவும்
உங்கள் தொலைக்காட்சி, டெக் மற்றும்
குளிர்சாதனப் பெட்டிகளை சிறந்த முறையில்
பழுது பார்க்கவும்

நாடவேண்டிய இடம்

TECHNICO COOL ENGINEERINGS
K. K. S. Road Kokuvil

(முன்னைய Electro Ref Cool Engineers என்ற நிறுவனம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்ரேம்.)

04131

வையகம் சிறக்க வருகிருள் சித்திரையாள்
வாழ்வும் வளமும் பெருக வரவேற்போம்.

சுவையும், சுகாதாரமும் நிறைந்த
சிற்றுண்டி வகைகள், மதிய போசனம், மற்றும்
சூடான பானங்கள் ஆகியவற்றிற்கும்
சோடா வகைகள் குளிர்பானங்கள்
பால்மா வகைகளுக்கும்

ஸ்ரான்லி கன்ரீன் &
கூல் (B) பார்
148/2 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

04133





# மக்கள் வங்கியின்

# புதுவருட

# வாழ்த்துக்கள்

புத்தாண்டைக் கொண்டாடும்
எமது வாடிக்கையாளர்களுக்கும்
மற்றும்
ஆதரவாளர்களுக்கும்

## மக்கள் வங்கி

தனது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றது.

**'மக்கள் வங்கியே நம் தோழன்'**

பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்

**மக்கள் வங்கி**

04116

# புத்தாண்டு நிகழ்ச்சிகள்

## துர்க்காபுரத்தில்

பிரமோத வருடப்பிறப்பை முன்னிட்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு காலை சந்தி பூஜை இடம்பெறும் முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், 11 மணிக்கு உச்சிக் காலப் பூசையும், பிற்பகல் 5 மணிக்கு சாயரட்சைப்பூசையும், இரவு 7 மணிக்கு அர்த்த சாமப் பூசையும் இடம்பெறும்

## காரைநகரில்

இன்று புதுவருடப்பிறப்பன்று மாலை இளைஞர்களுக்கான விளையாட்டுப்போட்டி, அழகாபுரி கிராம முன்னேற்றச் சங்க ஆதரவுடன், அழகாபுரி மாணவர் மன்றம் நடாத்தவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை கி.மு.ச தலைவர் ஏ. ஜெயரத்தினமும். மா ம. தலைவர் சு. இளங்கீரனும் செய்து வருகின்றனர்.

## அரியாலையில்

அரியாலை 71வது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 6 . 30 மணி - 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி (பொது) பி. ப 2 . 30 மணி மெய்வல்லுநர் போட்டிகள் பி. ப 5 மணி - மாபெரும் விநோத உடைப்போட்டி.

இரவு 7 மணி– அரியாலையூர் கே ரி. சுப்பிரமணியம் சகோதரர்களின் மங்கள இசை இரவு 7 30 மணி - பொதுக் கூட்டமும் பரிசில் வழங்கலும் இரவு 8 00 மணி - 'வர்க்கம் விழிக்கிறது' சமூக நடகம் இரவு 10 . 30 மணி – இசைத் தென்றல், இரவு ஒரு மணி அளவெட்டி என். கே. பத்மநாதன், இணுவில் ராதாகிருஷ்ணன், இணுவில் புண்ணியமூர்த்தி குழுவினரின் கெஞ்சிற் கச்சேரி, இரவு 2 30 மணி - கே. எஸ். பாலச்சந்திரன் குழுவினரின் கலைக் கதம்பம்.

## புங்குடுதீவில

புங்குடுதீவில் இன்று புத்தாண்டு தினத்தன்று மாபெரும் விளையாட்டு விழாவொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. புங்குடுதீவு கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆதரவில் சன்ஸ்ரான் விளையாட்டு கழகம் இப்போட்டியை நடத்துகின்றது 3 – ம் வட்டாரம் பராசக்தி வித்தியா சாலைக்கு அருகிலுள் விளையாட்டுமைதானத்தில்இப் போட்டிகள் நடைபெறுகின்றன. பிரதமவிருந்தினராக முன்னுள் வேலணை உதவி அரசாங் அதிபரும் தற்போதைய பொது நிர்வாக பிரதிப்பணிப்பாளருமான திரு எஸ் சடாட்சர சண்முகதாஸ் கலந்து கொள்கின்றார் டாக்டர். பஞ்சலிங்கம் வேலணை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுநிர்வாகஉத்தியோகஸ்தர் திரு: என். தனபாலசிங்கம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்ராக கலந்து கொள்வார்கள். (24)

## நாயன்மார்கட்டில்

நாயன்மார்க்கட்டுப் பகுதி மக்களுக்கு இன்று தொடக்கம் நல்லதண்ணீர் கிடைக்கும்.

இத தண்ணீர் வழங்கும் வைபவம் இன்று நண்பகல் 12 . 00 மணிக்கு நாயன்மார்கட்டு செம்மணி வீதியிலுள்ள தனியார் ஆஸ்பத்திரி காணியில் யுனிசெப்திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தண்ணீர் தாங்கியிலிருந்து இத் தண்ணீர் கிடைக்கவிருக்கிறது.

இத் தண்ணீர் வழங்கு நிகழ்ச்சியை யாழ். மாநக ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைக்கவிருக்கிறார். (33)

# முழங்காவிலில் எழுச்சி விழா

அன்னை பூபதி நினைவாக பூநகரி பிராந்தியத்துக்கான எழுச்சி விழா இம்மாதம் 19ம் திகதி முழங்காவில் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவை யொட்டி விளையாடடுச் கழகங்களுக்கிடையிலான உதைப் பந்தாட்டப் போட்டிகள் வலைப்பந்தாட்டப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இவ்விழாவிற்கு முன்பாக சகல சந்திகளிலும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு உயர்ந்த கம்பங்களில் புலிக் கொடி பறக்க விடும் வேலைகளில் போட்டி போட்டுக் கொண்டு மக்கள் ஈடுபட்டு வருகிறார்கள். எழுச்சி விழாவிற்கான வேலைகளில் சிற்றார் அவைக் கிளையினரும்விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# புங்குடுதீவில் கடும்வறட்சி

புங்குடுதீவு பகுதியில் நிலவும் கடும் வறட்சி காரணமாக அங்கு குடி தண்ணீர்ருக்குப்பெருந்தடடுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையிலிருந்து அப்பகுதியில மக்களுக்கு உதவும் வகையில் புங்குடுதீவு நயினாதீவு பலநோ.கூட்டுறவுசங்கம குடி நீர் விநியோகத் திட்டமொன்றை மேற்கொண்டு வருகிறது.

இச்சங்கம் சுமார் எண்பத்தையாயிரம் ரூபா செலவில் புதியதண்ணீர் வவுசர்ஒன்றைக் கொள்வனவு செய்து மக்களுக்கு ஒரு கலன் தண்ணீர் நாற்பது சதமாக விற்பனை செய்து வருகிறது. (20)

COMPUDATA
(PRIVATE) LIMITED

மலரும் புத்தாண்டில்
தமிழீழ உள்ளங்களின் இதயக்கனவுகள்
நனவாக எம் உளமார்ந்த வாழ்த்துக்கள்

பண்டிகையின் பின் தலைநகர் செல்லும்
மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
எமது அடுத்த தொகுதி

dBASE LOTUS 1 2 3 Word Star 2000etc
(காலை, மாலை, இரவு, வாரநாள், வாரஇறுதி)

விரிவுரைகள்

02-05-90. 18-04-90 18-04-90

முதல் ஆரம்பம்

தொடர்பு: Compudata (pvt) Ltd.
11, St Lucia's Street
Colombo - 13

04148

வாழ்வு சிறக்க வருகிறாள் சித்திரையாள்
வளமிகு வாழ்வைப் பெற வணங்கி நிற்பமே

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை கடதாசி கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்)

196, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள், புதுமனைப்புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள். விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள் அறிமுக அட்டைகள் அடிக்கும் அட்டைகள் பிறந்த தின மற்றும் சுபதின அழைப்பிதழ் அடிக்கும் அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள் எழுது கருவிகள் மின்சார உபகரணங்கள் அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் தீந்தைகள் மற்றும் இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் சகல விதமான கடதாசி வகைகள் மட்டைவகைகள் அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக்கொளலாம்

03163

எங்கள் மனதில் தங்கும் இன்பம் இவ் இனிய
புத்தாண்டில் என்றும் நிலைக்கப் பிரார்த்திக்கிறோம்

பெண்களுக்குத் தேவையான

திருமண, நடன மற்றும் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான சகல அலங்கார நகைகளும் தையல் உபகரணங்களும் அழகு சாதனப் பொருட்களும் வித விதமாகத் தெரிவு செய்ய

AMBIHAPATHY FANCY GOODS
அம்பிகாபதி பான்சி கூட்ஸ்

66 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

04138

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

வீடுகள் காரியாலயங்கள் விருந்தினர்
விடுதிகள் மற்றும் வைத்தியசாலைகள்
முதலியவற்றை கண்ணைப்பறிக்கும் உயிரோவியத்திற்கொப்பான செயற்கை
மலர்களால் அலங்கரிக்க

கிறீன் காடின்
GREEN GARDEN
No3 ஜும்மா மோஸ்க்லேன் யாழ்ப்பாணம்

இம்மாதம் 14, 15, 16, 17 திகதிகளில் ஈஸ்டர் தினச் சிறப்பு நிகழ்ச்சியாக யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் (பெரிய கோயில்) எமது ஸ்தாபனம் நடாத்தும் மலர்க் கண்காட்சியும் விற்பனையும்நடைபெறவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

04142

அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

அரசாங்க அங்கிகாரம் பெற்ற மின்சார ஒப்பந்தக்காரர்களும் மின்சாரப் பொருட்கள் விநியோகஸ்தர்களும் மாருதி பம்ப் தயாரிப்பாளர்களும்

PERPANS ORGANISATION
(Engineers & Contractors)

846 K: K. S. Road Jaffna

04137

## முரசொலிக்கு வந்த கடிதம்

# பூமாலை, சோடாவுக்காக படியேறும் அதிகாரிகள்

ஆசிரியர்
முரசொலி

யாழ்பாணத்தைச் சுற்றியுள்ள கிராமப் பாடசாலைகள் பெரும்பான்மையானவை வியாபார ஊக்குவிப்பு நிலையங்களாகவும் ஆசிரியர்கள் இளைப்பாறும் மண்டபங்களாகவும் இளைப்பாறும் வயதினர் பின்னும் சம்பளம் பெற்றுக் கொண்டு பொழுதைக் கழிக்கும் சத்திரங்களாகவும் மாறிவிட்டன. இதனால் பாடசாலைகள் தோறும் அமைதியற்ற நிலை, கடமை உணர்வுள்ள ஆசிரியர்களுக்கெதிரான கெடுபிடிகள் மாணவர்கள் ஆசிரியர்களிக்கிடையே விரிச்சல்கள், பெற்றோர் ஆசிரியர்களிடையே மனத்தாங்கல்கள், ஆசிரியர்களினால் கல்வி கற்பிக்கப்படும் 'கொட்டில் கட்கு' வராத மாணவர்கள் மீது பழிவாங்கல்கள். இதற்காகவே பெரும்பகன்மை ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பிப்பதை தவிர்த்து 'கொட்டில்களில்' கற்பிக்கின்றார்கள். மாணவர்களோ பாடசாலையில் கிடைக்காத கல்வியை 'கொட்டில்களில்' வாங்குவதற்காக அவ்விடங்கட்கு படை எடுக்கின்றார்கள். பெற்றோர்கள் விரும்பியோ விரும்பாமலோ தங்கள் பிள்ளைகளைக் 'கொட்டில்களுக்கு' அனுப்ப வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதிகாரிகளோ பூமாலைகளுக்காகவும் சோடா, வடை. மதிய விருந்துகளுக்காகவும் பாடசாலைகள் தோறும் ஏறி இறங்குகின்றார்கள. ஆசிரியர்கள், அதிகாரிகளின் குறைகளைச் சுட்டிக் காட்டினால் அப்பெற்றோரின் பிள்ளைகள் மீது பழி வாங்கல் இந்நிலையை இப்போது பதவியேற்றிருக்கும் கல்விப்பணிப்பாளர் அறிவாரா? பெற்றோர்களை மாணவர்களை ஆங்காங்கே சுதந்திரமாக சந்தித்தும் பாடசாலைகளின் அபிவிருத்திச் சபைகளின் ஆலோசனைகளைப் பெற்றும் யாழ. மாவட்டத்தின் கல்வி நிலையை புனரமைப்பாரா? தமிழீழத் தாயகத்தை நிறுவிட சங்கற்பம் பூண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இதைக் கருத்திற் கொள்வார்களா?

காரைநகர் சி. சண்முகநாதன்

# மினிபஸ் நடத்துநர்கள் பண்பாக நடக்கப்பழகுவார்களா?

ஆசிரியர்
முரசொலி

யாழ்ப்பாணம் - மானிப்பாய் - பண்டத்தரிப்பு - இளவாலை கீரிமலைஆகிய பகுதிகளினூடாக சேவையில் ஈடுபட்டுள்ள788 இலக்க தனியார் மினிபஸ்களில் பிரயாணம் செய்வோர் பலவித இன்னல்களை அனுபவிக்கவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது தனியார் மின்பஸ்சிற்கு தனியான ஒரு அமைச்சை அரசாங்கம் எற்படுத்தியும் இப்பிரச்சினைகளுக்கு அது தீர்வுகாண்பதாகத் தெரியவில்லை மேற்படி சேவையில் ஈடுபட்டுள்ள மினிபஸ்களில் சில மினிபஸ் என்று சொல்லமுடியாதநிலையிலேயே மேற்தளம், ஆசனங்கள் சீரற்றுக்காணப்படுகிறன. இவ்வாறான மினிபஸ்களில் கடமைபுரிவோரும் ஏனையோரும் வயதுமுதிர்ந்த பெரியவர்களுடன்கூட பன்பற்ற முறையிலே நடந்து கொள்வது மனதிற்கு வேதனைதரும் செய்தியாகவுள்ளது கல்விகற்கும் மாணவர்கள் கிழமைநாட்களிலும், விடுமுறைநாட்களிலும் பிரயாணம் செய்யும்போது அவர்களிடமிருந்து பொதுவாக 3 ரூபா அறவிடப்படுவதாகப் பேசப்பட்டபோதும், பெரியோர்களிடம் 5 ரூபா அறவிடப்படுகின்றது. இதிலிருந்து எமக்கு விடுதலை கிடைக்காதா?

இளவாலை இக்கடிதத்தில் 15 பேர் ஒப்பமிட்டுள்ளனர்

# 'முரசொலி' வெற்றிக் கிண்ண அரை இறுதிப் போட்டி

(விளையாட்டுத்துறை நிருபர்)
யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, முரசொலி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன், தேசிய புத்தாண்டு விழாவை முன்னிட்டு முரசொலி வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் இன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சென் மேரிஸ்நீலஅணியை எதிர்த்து, குருநகர் விளையாட்டுக் கழக 'சீ' பிரிவு அணியும் சென் மேரிஸ் வெள்ளை அணியை எதிர்த்துப் பாஷையூர் சென் அந்தனீஸ் 'ஏ'பிரிவு அணியும் மோதவுள்ளன. முதலாவது ஆட்டம் பிற்பகல் 4. 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்று கயிறு இழுத்தல் போட்டியின் ஆரம்பப் போட்டிகளும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (16)

## 'றைபைசென்' மூன்றாவது பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் றைபைசென் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப இரண்டு மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. திரு. இரா. லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகள் விசேட விருந்தினர் உரை புதுவருட உத்தியோகத்தர் தெரிவு என்பன இடம்பெறும்.

# மன்னார் விவசாயிகளுக்கு அமெரிக்கக் குழு பாராட்டு

மன்னார்ப் பகுதி விவசாயத்தை அமெரிக்கக் குழு பாராட்டியுள்ளது. அண்மையில் மன்னாரில் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட வந்த அமெரிக்கத் தூதரும் உயரதிகாரிகளும் இங்கு விவசாய அபிவிருத்தி முயற்சிகளைப் பாராட்டினர்.

இம்மாவட்டத்தில் ஐக்கிய அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களைப் பார்வையிடத் தூதுவரும் வரும், உயரதிகாரிகளும் பல விவசாயப் பகுதிகளுக்குச் சென்றனர்.

விவசாயிகளின் பயிர்செய்கைத் திறன் இவர்களைப் பெரிதும் கவர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கீரிமலையில் பெண்ணின் சடலம் கரை ஒதுங்கியது

நேற்று முன்தினம் பிற்பகல் கீரிமலை சுடலை அருகே சடலம் ஒன்று கரை ஒதுங்கிக் காணப்பட்டது 50 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவரின் இச் சடலம் கீரிமலை கேணிப் பாதுகாவலர், கிராமசேவையாளர் ஆகியோரால் அடையாளம் காண்பதற்காகத் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கோப்பாயில் நாளை

கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு நடாத்தும் தமிழ்- சிங்களப் புத்தாண்டு விழா நாளை (ஞாயிறு) நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. சி முருகேசபிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது, இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் திரு. நா. பாலகிருஷ்ணன் அவர்கள் கலந்துகொள்வார்,

காலை நிகழ்ச்சியாக ஆண், பெண் இரு பாலாருக்குமான சயிக்கிள் ஓட்டப் போட்டியும், மரதன் ஓட்டப்போட்டியும், பிபகல் 2 மணிக்கு நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்ச்சியாக கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (33)

## இயக்கச்சி இந்து ஆசிரியர் இடமாற்றம்

இயக்கச்சி அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் நீண்டகாலமாக பயிற்றப்பட்ட இந்து சமய ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.க. சண்முகலிங்கம் இம்மாதம் தொடக்கம் யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். பிரபல சமூக சேவையாளரும், இந்து சமயப் பற்றும் மிக்க இவர் வருடந்தோறும் வித்தியாலய மாணவரிடையே சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி தனது செலவிலேயே பெறுமதியான பரிசில்களை வழங்கி ஆசிரியர்கட்கு முன்னோடியாக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## புதுக்குளத்தில் அன்னை நினைவு தினம் அனுஷ்டிப்பு

வவுனியாவில் உள்ள புதுக்குளம், மருக்காரம்பளை, பாரதிபுரம் கணேசபுரம், சமயபுரம் பகுதிகளில் அன்னை பூபதியின் நினைவாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. இவ் இடங்களில் அன்னையின் தியாகம் பற்றி வவுனியா விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் உரை நிகழ்த்தினர்.

## பிறவி இருளகற்றுவாய்!

இரு வினைப் பிறவியின் இருளகற்றியே அருளும்
ஏந்தலே மருதடிப்பதி மேவிய விக்கின விநாயகா!
வருமுதல் துன்பம் பிரமோதூத புத்தாண்டில்
தானும்
வளப்புறு தேர்மிசை வந்தே அருள்வாய் நீ!
அருமுதல் பொருளே எம் அம்பிகைபாலனே நீயும்
கருகிய மனதின் மருந்தாய் மாறி வந்தநாயோ!
தருமருள் தானும் தரணி தனிலே தலைவிரித்தாடும்
வன் செயலது ஒடுக்கிய தண்ணருள் தானுமே!

— கங்கை பொங்குது நூலிலிருந்து
(இன்று மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்த் திருவிழா)

# அமைதி, சுபீட்சம் பெருக இலங்கை வங்கி வாழ்த்துகிறது

மலரும் புத்தாண்டில் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெற்றுச் சுபிட்சம் பெருக வேண்டுமெனஇலங்கை வங்கி முகாமைத்துவம் நம்பிக்கையோடு வாழ்த்துகின்றது.

எம் மக்களும் பொதுசனத் தொடர்பு சாதனங்களும் அளித்த பேராதரவு காரணமாகவே இலங்கை வங்கி ஒரு இக்கட்டான காலகட்டத்திலும பணக்கொடுக்கல் வாங்கல் உட்படப் பல சேவைகளை இப்பகுதி மக்களுக்கு வழங்க முடிந்தது.

அதேவேளை வங்கி முகாமைத்துவம் இச்சேவைகளைத் தடங்கலின்றி வழங்க எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியிலும் பாடுபட்ட தனது ஊழியர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

எதிர்வரும் புத்தாண்டில் எல்லா வங்கிக் கிளைகளிலும் ஒரு பூரணத்துவமானதும் திருப்திகரமானதுமான சேவையை நம்மக்களுக்குக் குறைவில்லாமல் வழங்க முடியுமென வங்கியின் பொது முகாமையாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## சுவையான செய்திகள்

### விமானியை கலக்கிய எலிகள்

டோக்கியோ விமானநிலையத்தில் இருந்து புறப்பட இருந்த 747 ஜப்பான் ஏர்லைன் விமானத்தில் நியூயோர்க் செல்ல வேண்டிய 300 பயணிகள் இருந்தனர். ஏற்கனவே நியூயோர்க்கில் இருந்து வந்திருந்த இந்த விமானத்தில் 25 எலிகளை பரிசோதனை செய்து பார்ப்பதற்காக ஜப்பானுக்கு கொண்டு வந்திருந்தார்கள். எலிப் பெட்டியை இறக்கியபோது 23 எலிகளே இருந்தன. இரண்டு எலிகள் தப்பி விட்டன. அந்த இரண்டு எலிகளும் விமானத்திற்குள் எங்கோ புகுந்து ஒளிந்து கொண்டு விட்டன எங்கே அவை ஒளிந்து கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. விமான ஓட்டி எலியை வெளியே கொண்டு வராவிட்டால் விமானததை இயக்க மாட்டேன் என்று அடித்துச் சொல்லி விட்டார். வேறு வழியின்றி 300 பயணிகளும் இறக்கி விடப்பட்டனர். எலி தேடும் படலம் தொடங்கியது நீண்ட நேரத்தின் பின்னரேயே அந்த இரு எலிகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

### தாலியை கூவி விற்கிறார்கள்

பம்பாய் மின்சார ரயிலில் லேடீஸ் கம்பாட்மென்டில் லைசன்ஸ் லைசன்ஸ் என்று கூவி ஒரு பொருளை விற்பனை செய்கிறார்கள். அந்தப்பொருள் என்ன தெரியுமா? தாலி! இதனை ஏன் கூவி ஓடும் ரயிலில் விற்கிறார்கள் என்ற விபரம் தெரியவில்லை.

### நடமாடும் குளியல் தொட்டி

ஆலென் வாக் என்பவர் ஒரு வாகனம் வாங்கினார். பின் பக்கம் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான பகுதி இருக்கிறதல்லவா? அதைக் குளியல் தொட்டி போல் வடிவமைத்தார் நீர் நிரப்பினார். வண்டியை எடுத்துக்கொண்டு வீதியால் ஓட்டினார் நீச்சலுடையில் மனைவி குழந்தைகளை குளிக்கச் சொன்னார். இதனால் வண்டியும் ஏசி செய்யப்பட்டது போல் குளுகுளுஎன்று மாறியது. பிரான்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் 'நைஸ்' என்று ஒரு நகரம் இருக்கிறது. அங்குதான் இந்த நடமாடும் குளியல் தொட்டி பவனி வருகிறது.

# பிரமோதூத வருட பலன் உங்களுக்கு எப்படி அமையும்

சுக்கில ஹூ பங்குனி மீ 31 உ வெள்ளிக்கிழமை பின் இரவு நாடி 47 விநாடி 42, மணி 1 நிமுடம் 1ட அபரபட்ச சதுர்த்தி திதியில் அனுஷ நட்சத்திரத்தின் 3-ம் பாதத்தில் வியதீபாத நாம யோகத்தில் செவ்வாய் கால வோரோரையில் செவ்வாய் சூக்கும ராசத குண வேளையில் நட்சத்திர பட்ஷியாகிய கோழி சா வுத் தொழிலும் சூக்கும பக்ஷிதுயில் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய பிரமோதூத வருஷம் பிறக்கிறது. அன்று இரவு நாடி 37, விநாடி 42 மணி-9-10-முதல் நாடி 57, விநாடி 42, மணி 5-10 விஷு புண்ணிய காலமாகும். இப்புத்தாண்டு அதிக யோக முடையதாகவே அமைந்துள்ளது.

இராஜ யோகம் சகட யோகம் இராகு யோகம் பெற்றமையால் சகலவித நன்மைகளையும் தரவல்லமையுடைய வருஷமாமே.

இப்புத்தாண்டின் பலன்படி லக்கினுதிபன் 12-ம் இடமான மறைவிடம் பெற்றமையாலும் இலக்கினத்தில் இராகுயோகம் பெற்று நிற்பதாலும் வியாழ பகவான் ஆறும் இடம் அட்டமஸ்தானம் நிற்பதாலும் இந்நாட்டு பிரச்சினைகள் 15-07-1990வரை நிம்மதியற்றதாகவே அமையும் அதன் பின் குருபார்வை பெறுவதால் சகல இன மக்களினது குறைகளும் நீங்கி சமத்துவமான பலனையனுபவிக்க பலன் உண்டு. ஆகவே இப்புத்தாண்டின் ஜெனன கிரக சாதகப்படி அட்டமாதிபன் சூரியன் பாய்க்கியஸ்தானேடு கூடி இராஜயோகம் பெற்று உச்சகேந்திரம் பெற்றுப்பார்ப்பதால் இதுவரை இருந்து வந்த அச்சம், பயப்பீதி, உயிர்ச்சேதம், பொருள் சேதம் ஆகியன குறைந்து மனித ஜீவன்களிடம் மன உறுதி பூண்டு நிம்மதி பிறக்கவழி வகுக்கும் ஆகவே இலங்கையை பொறுத்த மட்டில் நற்பயன் உண்டு.

## இககிரகசாரப்பலன்படி

இலங்கை இந்தியாவுடன் நட்பு விருத்தியாகி பல துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் முன்னேற்றம் காணும் உள்நாட்டு கலவரங்கள் குறைந்து ஆனுல் அரசுக்கு அதிக கஷ்டங்கள் ஏற்படா வண்ணம் சமநிலை தென்படும் இலங்கைக்கு பலநாட்டு உதவிகள் அதிகரிக்கும் அரசுக்குள் சில உயர் அதிகாரிகளுக்குதிடீர் திடீர் என்று பதவி மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. இவ்வருடம் பொருளாதார ரீதியில் சம அளவு முன்னேற்றம் உண்டு. விலை வாசிகம் ஏற்றமும் இறக்கமுமாய் இருக்கும்.

# வருட ராசிப் பலன்

## மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்கால்)

பெரியோர் அனுசரணை, வாகன மாற்றம், அடிக்கடி தொழில் மாற்றம், இனசனப் பகை, பிரயாண அலைச்சல், இளைய சகோதர வழியில் கவலை, கடற்தொழில், இயந்திரத்தொழில், வைத்தியம், சோதிடம் பார்ப்போர் சம பலன் அடையவும் புதுவிதமான தொழில் முறைகளை கையாளவும் 15. 6. 190 இன் பின் இவர்களுக்கு கஷ்டங்கள் நிவர்த்தி காணவும திடீர் முன்னேற்றங்களை அனுபவிக்கவும் மனை பூமியற்ருேர்கள் நிவர்த்தி காணவும யோக பலன் உண்டாம்.

## இடபம்:

(கார்த்திகை, 2. 3. 4 பாதம்) ரோகிணி, மிருகசீரிடம் 1-2,

இவர்களுக்கு வாக்கு வசீகரம், உயர்பதவி, உத்தமருறவு, இலட்சுமி கடாட்சம், மனைபூமி சேருதல், சகோதர வழியுதவி, பணவரவு, உடல் ரோக நிவர்த்தி, புத்திர சந்தான விருத்தி, இனசன மகிழ்ச்சி, மனையில் விவாகப்பேறு, வணிகர்கள், கடற்தொழில், இயந்திரத் தொழில், கலைஞர்கள் அதிகளவு நன்மையடையவும் கல்வியால் உத்தியோகங்களை அனுபவிக்கவும் இராஜ மரியாதையும் உண்டு.

## மிதுனம்:

(மிருகசீரிடம், திருவாதிரை,) புனர்பூசம் 3-ம் கால்)

இவர்களுக்குஇப் புத்தாண்டு சத்துருபயம், உடல்நலக் குறைவு, வாகன நஷ்டம், குடும்பப்பிணக்கு, புத்திரர் கவலை, வெளியூர் பிரயாணங்களால் வீண்செலவு உண்டு. ஆகவே இவர்களுக்கு 15 7 90 இன் பின் சமபலனும் கடன் தொல்லை குறைவதும், மன நிம்மதியுண்டாயினும், இவர்களுக்கு இவ்வாண்டு சனி திருஷ்டி இருப்பதால் எக்காரியங்களையும் ஆலோசனை செய்து அவசரகுணம் இன்றிச் செய்வரேல் கஷ்ட நிலையில் நின்று நிவர்த்தி காண்பர். சனி வழிபாடு செய்ய சகல தோஸமும் நிவர்த்தி.

## கடகம்:

(புனர்பூசம், 4-ம் கால் பூசம்) ஆயிலியம்)

இவ்வாண்டு இவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு இல்லாமல் இருந்தாலும் கஷ்டமும். சுகமும் சமபலமாய் இருக்கும், இவர்கள் கல்வி தொழில் வ்வாகம், சங்கீதம் வெளியூர் பிரயாணம், வர்த்தகம், இயந்திர தொழில் செய்வோராகில் கூடிய அளவு சுகம் பெறுவர், இவர்கள் கொடுக்கல், வாங்கல் பிணை துணை நிற்பதைத் தவிர்த்துக் கொள்ளவும். இவர்களுக்கு உடல் ரீதியான ரோகபீடையாவது, இருதய வருத்தம், கிரந்த நேத்திர யோகம், போன்றவற்ருலாவது உபத்திரவம் கூடும், உடல்நலம் பேணி காக்கவும்.

## சிங்கம்:

(மகம்பூரம் உத்தரம் 1ம்கால்)

இவர்களுக்கு இப்புத்தாண்டு நன்மையுடையதாகவே, இருக்கும் இவர்களுக்கு இவ்வாண்டு கடன் தொல்லை இருக்கமாட்டாது. இவர்கள் வாகனம் வணிகம், வெளியூர் பிரயாணம், கல்விக்கற்றேருக்குதொழில்வாய்ப்பு, கலைஞர்களாயினும் அதிகவருமானம் அடைவதும வைத்தியம், சோதிடம், இயந்திர தொழில்செய்வோர் எண்ணியதிலும் பார்க்க அதிக இலாபமடையவும், அரசாங்க உத்தியோகஸ்தராகில் உயர் பதவியும், சம்பளஏற்றமும் அடைவர், இவர்களுக்கு இருதயம் ரோகம் முளங்கால்வாத தோன்றி மறையும், சிவன்வழிபாடு செய்யவும்,

## கன்னி:

(உத்தரம் 2,3,4 அத்தம் சித்திரை 1-2 கால்கள்)

இவர்களுக்கு இப்புத்தாண்டு வாக்கு வசீகரம்; தொழில் பேறு, இலட்ச்சுமி கடாட்சம், பெரியோர் அனுசரணை, வாகனயோகம், புத்திர மகிழ்ச்சி, புதிய தொழில், இனபந்துக்களின் அனுசரணை வெளிநாட்டில் உள்ளோரால் சுகமடைதல், நீண்ட நாள் அபிலாசை நிறைவேறல், உடல் ஒட்டிய ரோகமாயினும் நிவர்த்தி காணவும்பலன் உண்டாம், இவர்களுக்கு தெய்வ உதவி இருந்தால் எக்காரியங்களிலும் முன்நின்று வெற்றி காண்பர், சாதாரண பதவிகளில் இருப்போர் திடீர் உயர் பதவி வகிக்கவும் மனைக்குறையுள்ளோர் நிவர்த்தி காணவும் பலன் உண்டு.

## துலாம்:

(சித்திரை 3-4- சுவாதி விசாகம் ▮ 2 3ம் பாதம் )

இவர்கள் எவ்விஷயங்களிலும் நன்மையடையவர், இப்புத்தாண்டில் பணமேம்பாடும் உயர் அந்தஸ்தும் தானதரும செயல்களும் தம்மிடம் உள்ள பொருள்வளங்களை மற்ருேர்க்கு ஈந்து கொடுக்கும் மனச்சுபாவ முடையவராய் காணப்படுவார்கள் இவர்கள் தங்களவாக்கு சாதுரியத்தால் சகலவித காரியங்களையும் செய்துமுடிக்கும்தன்மையுடையவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்கு புத்திரசுகம், பூமியால் இலாபம், வணிகம் கடல் தொழில் கைத்தொழில் செய்வோர் இடைவிடாது தொழில் செய்யும் வாய்ப்பும் இவர்களுக்கு வெளியூர் தொடர்புகள் மூலம்தொழில்அமையவும் பலன் உண்டு.

## விருச்சிகம்:

(விசாகம் 4ம் பாதம் அனுஷம் கேட்டை)

இவர்களுக்கு இப்புத்தாண்டு சமபலனும் இடைவிடா முயற்சி மூலம் பணவருவாயும் வரவுக்கு மிஞ்சிய செலவினங்களும், பிதாமாதா வழியில் நன்மதிப்பும் உடன் பிறந்தோரால் கவலையும், வாகன மாற்றமும் வணிகர்கள் கலைஞர்கள் சம பலனும் உண்டு இயந்திரத் தொழில் புரிவோர் மிக அவதானமாகவும் இருத்தல் வேண்டும், இவர்களுக்கு 15 7. 1990 வரை இவ்வாண்டின் பலன்படியும் இராசியின் பலன்படியும் குரு அட்டம் இராசியில் நிற்பதால் எவ்விஷயங்களையும் நன்கு உணர்ந்து செயல்பட சகலவித காரியங்களும் படிப்படியாய் நன்மையுண்டாக பலன் உண்டு.

## தனுசு:

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்)

இவர்களுக்கு இப்புத்தாண்டு தொழில் மூலம் புதியதொரு மாற்றமும், வரவுக்கு மிஞ்சிய செலவினங்களும், கற்பனைக்கெட்டாத யோசனைகளும், கணவன் மனைவியரிடையே மனவிரிசலும், புத்திரர் மூலம் வீண் செலவினங்களும், பலவித தொழில்களைச் செய்யும் யோசனைகள் இருந்தாலும் 15.7.1990 க்குள் இவர்களுக்கு ஓர் திடகாத்திரமான கிரக சுப பார்வையிருப்பதால் எதையும் சலிக்காது செய்து முடிகளும் தன்மையுடையவராகவே இருப்பார்கள். இவர்கள் வணிகம், இயந்திர தொழில் வாகனத்தொழில், வையித்தியம், கலைஞர்கள் ஆகியோர்களாகில் சமயோசித புத்தியால் உயர்நிலை அடைவர்.

## மகரம்:

(உத்தராடம் 2,3,4 திருவோணம் அவிட்டம் 1, 2)

இவர்களுக்கு இப்புத்தாண்டு இதுவரை காலமும் இருந்து வந்த கஷ்டங்கள் படிப்படியாய் குறையவும், மன நிம்மதியாய் இருக்கவும், பலன் உண்டாயினும், 15-7-90 ன் பின்தான் அதிக சுகங்களையனுபவிக்கப் பலன் உண்டு. இவர்களுக்கு இப்புத்தாண்டில் மனையில் சுபகாரியங்கள் நடக்கவும், பெரியோரனுசரணைகள் ஏற்படவும், புதிய தொழில் வளங்களைச் செய்யவும், தடைப்பட்ட பணவரவு, ஆடையாபரண சிறப்பும், அன்னியராலுதவியும், புத்திரர் மூலம் நன்மதிப்பும், குடும்ப மகிழ்ச்சியும், கல்வியால் தொழிலும், தடைப்பட்ட விவாகமாயினும், தடையின்றி நிறைவேறவும், வணிகம், கடல், தொழில், கலைஞர்கள் அக மகிழ்ச்சியாய் இருக்கவும்பலன் உண்டு.

## கும்பம்:

அவிட்டம் 3-4, சதயம் பூராட்டாதி, 1-2-3)

இவர்களுக்குஇப்புத்தாண்டு புதிய தொழில் வளங்களைச் செய்யவும், தடையான காரியங்கள் நிவர்த்தி காணவும், எவ்வழிகளிலும் இவர்கள் முன்னேற்றம் அடையும் வாய்ப்பு உண்டாயினும், இவர்களுக்கு இராகு, சனி திருஷ்டி இருப்பதால் எவ்வித நன்மைகளைச் செய்தாலும் குறை குற்றங்களைக் கேட்கவும், மனவிசாரமுண்டாகவும் பலனுண்டு. ஆனுல் இவர்கள் 5-5-90 ன் பின் திடீர் யோக சாலியாக திகழவும் உயர் பதவி உத்தியோகம் இல்லாதோர்க்குத் தொழில் வாய்ப்பும் வெளிநாட்டுப் பிரயாணத் திடை நீங்கவும் சகோதரர்களின் நன்மதிப்பைப் பெறவும் பலன் உண்டு'

## மீனம்:

(பூரட்டாதி, 4ம் கால் உத்திரட்டாதி, ரேவதி)

இவர்கள் பாக்கிய சாலிகளாகவே இப்புத்தாண்டின் பயன் அமைவதால் புத்திரர் மூலம் சுகம். குடும்ப சௌக்கியம், வாகனப்பேறு. தடைப்பட்ட காரியநிவர்த்தி, தான தருமசெயல். அன்னியாகவி' லட்சுமி கடாட்சம், மனையில் சுப காரியவிருத்தியுண்டாயினும் 15-7-1990 வரை இவர்களுக்கு மூட்டு வாதம், இரத்தக் கொதிப்பு, மூலவருத்தம் ஆகியன இவர்களை நாட இடமுண்டு. ஆகவே இவர்கள் உடல் நலம் பேணவும். இவர்களுக்கு15-7-90 ன் பின் தாராளமான பணவிருத்தியும், மனை பூமியற்ருேர்க்கு நிவிர்த்தி காணவும், தடைப்பட்ட விவாகமாயினும்திடீர்என்று நடந்து முடிக்கவும் பலன் உண்டு.

யாழ். சோதிடர்
ச. அரிநாயகம்




மருதடி விநாயகன் திருவடி பணிவோம்
ரத பவனி வரும் விநாயகன்
விக்கினங்கள் தீர்த்து எம்மை வாழ வைக்க
சித்திரைப் புத்தாண்டாம் இச் சிறப்புறு
நன்னுளில் வணங்கி நிற்கின்ருேம்

அனுபவம் வாய்ந்த
SUPER GRADE
ஆசிரியர் குழுவினுல்
ஆண்டு 6 முதல் உயர் தரம் வரை
சிறந்த முறையில் கல்வி போதித்து வரும்
தனித்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம்

BITSMANS INSTITUTE
MANIPAY

04136

### மன்னார், வவுனியா, பருத்தித்துறை,

# தள வைத்தியசாலைகளில் வைத்திய பற்றாக்குறை

மன்னார், வவுனியா, பருத்தித்துறை திருகோணமலை போன்ற தள வைத்தியசாலைகளில் நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள் மற்றும் பிற வைத்தியர்கள் இல்லாமையால் பராமரிப்பு வேலைகள் பாதிப்படைந்து வருகின்றனர்.

தெல்லிப்பளையில்புற்றுநோய் வைத்தியத்திற்காக கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்ட போதும் ஆளணி, பயிற்றப்பட்ட நிபுணர்கள் கோபால்ற் சிகிச்சைக்கதிர் உபகரணம் ஆகியன இல்லாததால் இக்கட்டடம் கட்டிமுடிக்கப் பட்டும் செயற்பட முடியாதுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் மட்டக்களப்புமாவட்டங்களில் உள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரிகளில் போதனாசிரியர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவிவருவதால் பயிற்சித்திட்டங்கள் வேகமாக பாதிப்படைந்துள்ளன. (03)

## விளையாட்டுப்போட்டி

வவுனியா— கலைமகள் சனசமூகநிலையமும், விளையாட்டு கழகமும் இணைந்து நடத்தும் 9வது சித்திரைப் புதுவருட விளையாட்டுப்போட்டி இன்று கழகமைதானத்தில் நடைபெறும்என ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## யாழ். செயலகத்தில் பிறப்பு பத்திர விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ். மாவட்ட செயலகத்தில் மீண்டும் பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தேங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மார்ச் மாதம்வரை 26 ஆயிரம் விண்ணப்பங்கள் தேங்கியிருந்தன. கடந்த சில வாரங்களாக விண்ணப்பங்கள் ஏற்பது நிறுத்தப்பட்டிருந்ததால் விண்ணப்ப தேக்கம் ஓரளவு குறைந்துள்ளது.

தினமும் 400 விண்ணப்பங்கள் யாழ் செயலகத்திற்கு வருகின்றன. போட்டோஸ்ரட் இயந்திரம் பழுதினாலும் அத்தாட்சிப்பத்திரம் பதியும் வடிவங்கள் இல்லாமையினாலும் அத்தாட்சிப் பத்திர விநியோகம் தடைப்பட்டுள்ளது. இதனால் மேலதிகமாக பல விண்ணப்பங்கள் தேங்கி வருகின்றன. (03)

## யாழ் பரியோவான் கல்லூரி லியோ கழக நிதி சேகரிப்பு

இன்றும் நாளையும் நடைபெறும் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் தேர், தீர்த்த திருவிழாக்களின் போது யாழ் பரியோவான் கல்லூரி லியோ கழகம் வட பிராந்திய புற்று நோயாளர் சங்கத்திற்கு நிதி சேர்க்கவுள்ளனர்.(03)

### மக்கள்...

களை தெரிவிக்கின்றது என எஸ், கரிகாலன் குறிப்பிட்டார். (05)

### பொலிஸ்...

அவை சரியான முறையில் துரித கதியில் செயற்படுத்தப்படவேண்டியதன் தேவை பற்றியும் இச் சந்திப்பின்போது பேசப்பட்டதாக செயலாளர் நாயகம் யோகி நேற்று மாலை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் நடந்த அரசு-புலிகள் சந்திப்பு சுமூகமான சூழ்நிலையில் நடைபெற்றதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் இன்று

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வன்னி கலை கலாசாரப்பிரிவுவழங்கும் நாடகம், வில்லுப்பாட்டு இன்னும் பல கலை நிகழ்ச்சிகள் சித்திரை புத்தாண்டு தினமான இன்று இரவு மன்னார் வீதி கலைமகள் சனசமூக நிலைய மைதானத்திடலில் இடம் பெறும் என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.(11)


## புத்தாண்டு வாழ்த்து

முடிந்திட்ட சுக்கிலமாம் ஆண்டுடனே
துயரெல்லாம் முடிந்து போக
விடிவெள்ளி வந்ததென மன்பதையோர்
புதுவாழ்வை விரும்பி ஏற்க
அடியெடுத்து வைக்கின்ற பிரமோத
புத்தாண்டில் அவனி மக்கள்
செடிகளிலே சிரிக்கின்ற மலர்போல
என்றென்றும் செழித்து வாழ்க.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.


## கிளிநொச்சி எழுச்சி விழா இன்றைய நிகழ்ச்சிகள்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலாசார பிரிவினால் கிளிநொச்சியில் நடாத்தப்படும் எழுச்சி விழாவின் இறுதி நாளான இன்று மக்கள் முன்னணியின் கலாசார பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் சிறப்புரை, நாமிருக்கும் நாடுநமதென்று அறிந்தோமா என்ற விவாத அரங்கு தி.முத்து சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இத்துடன் இசையரங்கு, நடனம் காத்தவராயன் நாடகம் ஆகியன இடம் பெறவுள்ளது.

### 'முரசொலி' வெற்றிக் கேடயத்திற்கான

# மாபெரும் உதைபந்தாட்டப்போட்டி

தமிழ் - சிங்கள புத்தாண்டு விழாவை முன்னிட்டு யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்றுவரும் மாபெரும் விளையாட்டு, கலை, கலாசார விழாவின் ஓர் அங்கமாக முரசொலி நிறுவனத்தின் அனுசரணையுடன் முரசொலி சுழல் வெற்றிக கேடயத்திற்கான" மாபெரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இறுதி ஆட்டம் நடைபெறுகிறது.

இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்

காலம்: 15. 04. 90 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4.00 ம.

தலைவர்; உயர் திரு க, சபாபதிப்பிள்ளை அவர்கள்
(யாழ். உதவி அரச அதிபர்)

பிரதம விருந்தினர்; திரு. எம். சிவராஜா
(ஆளுநர் நாயகம், முரசொலி)

உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்


வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் நண்பர்கள்
அனைவருக்கும் எமது இன்பம் பொங்கும்
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

சைவச் சிற்றுண்டி உணவு வகைகள், மற்றும் மதியபோசன உணவுக்கும் குளிர்பான வகைகள், ஜிலேபி லட்டு மிக்ஸர் மஸ்கட் மைசூர்பாகு மற்றும் சுவிற்ஸ் வகைகளுக்கும் உங்களுக்குத் தேவையான சகல சிற்றுண்டி வகைகளை ஓடருக்குச் செய்துகொள்ளவும் நாடுங்கள்

## நியூ குகானந்த பவான்

879, தட்டாதெருசந்தி

கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்,

04134



சித்திரைப் புத்தாண்டே வருக! சிறப்புக்கள் யாவும் தருக!

அனைவருக்கும் எவர்விஷன் ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

✶ புதிய வருடத்தில் புதிய சலுகை

- உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகல மங்கல வைபவங்களையும் நவீன வீடியோ கமறா, வீடியோ மிக்ஷர் மூலம் படப்பிடிப்புச் செய்வதில் நிபுணத்துவம் வாய்ந்த சேவையை வழங்கும்

★ எவர்விஷன் ஸ்தாபனத்தினர்

பிறக்கும் புத்தாண்டையொட்டி உங்களுக்கு வழங்கும் புதிய சலுகை

- எமது ஸ்தாபனம் மூலமாக வீடியோபடம் பிடித்துக் கொள்பவர்களுக்கு மேலதிக கட்டணம் எதுவுமின்றி வீடியோ பிரதியொன்றை நீங்கள் குறிப்பிடும் உங்கள் வெளிநாட்டிலிருக்கும் உறவினருக்கு எமது செலவிலேயே அனுப்பிவைக்கின்றோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விபரங்களுக்கு:

## எவர்விஷன்

21, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

04140


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால்யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 14-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது